



# தினபூமி

thinaboomi.com










**அரசு முறை பயணமாக விரைவில் இந்தியா வரும் இங்கிலாந்து மன்னர் சார்லஸ், ராணி கமிலா**

...2-ம் பக்கம்

**பொங்கல் அன்று சி.ஏ. தேர்வுகள்: எதிர்க்கட்சிகள் விமர்சனத்துக்கு நிர்மலா சீதாராமன் விளக்கம்**

...3-ம் பக்கம்

**ஐ.பி.எல். வரலாற்றில் அதிக தொகைக்கு ரிஷப் பண்ட் ஏலம்: ரூ.27 கோடிக்கு லக்னோ எடுத்தது**

...7-ம் பக்கம்






● சென்னை இராஜா அண்ணாமலைபுரம், திருவாவடுதுறை டி.என்.ராஜரத்தினம் கலையரங்கில் நேற்று நடைபெற்ற முத்தமிழ் பேரவையின் பொன்விழா ஆண்டு இசை விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, பல்வேறு விருதுகளை நடிகர் சத்யராஜ், டி.கே.எஸ்.மீனாட்சிசுந்தரம், ஆண்டாள் பிரியதர்ஷினி, காயத்ரி கிரீஷ், திருக்கடயூர் டி.எஸ்.எம். உமாசங்கர், சுவாமிமலை சி.குருநாதன், தி.சோமசுந்தரம், பார்வதி ரவி கண்டசாலா ஆகியோர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் பி.அமிர்தம், ஜி.ராமானுஜம், குணாநிதி அமிர்தம், பக்தவத்சலம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரசியலமைப்பு சட்ட தினம்:

# நாளை சிறப்பாக கொண்டாட முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

## பள்ளி, கல்லூரிகளில் போட்டிகள் நடத்தவும் அறிவுறுத்தல்

சென்னை, நவ. 25-

**அரசியலமைப்பு சட்ட தினத்தை முன்னிட்டு நாளை பள்ளி, கல்லூரிகளில் போட்டிகள் நடத்தவும், அனைத்து தமிழக அரசு துறைகளில் சிறப்பாக கொண்டாட முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 75-ம் ஆண்டை முன்னிட்டு, அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;



மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்துச் செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும். இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 75-வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் நாளை (26.11.2024) காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், மாண்பை உயர்நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க முதல்வர் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள், கருத்தரங்குகள், வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### பரபரப்பான அரசியல் சூழ்நிலையில்

# இன்று பார்லி. குளிர்கால கூட்டத்தொடர் ஆரம்பம்

## அதானி விவகாரத்தை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டம்

புதுடெல்லி, நவ. 25-

**பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகிறது. இந்த கூட்டத்தொடர் டிசம்பர் 20-ம் தேதி வரை நடைபெறவிருக்கிறது. இதில், வக்பு சட்ட திருத்தம், ஒரே நாடு ஒரே தேர்தல் உள்ளிட்ட முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அதானி விவகாரத்தை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளது.**

**3-வது கூட்டத்தொடர்..**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கி டிசம்பர் 20-ம் தேதி வரை நடைபெறும் என பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ தெரிவித்திருந்தார். இந்த குளிர்கால கூட்டத்தொடர் 18-வது மக்களவையின் மூன்றாவது கூட்டத்தொடராகும். இந்நிலையில்தான், எந்தெந்த மசோதாவை அரசு அறிமுகப்படுத்தும், எதை எதை நிறைவேற்றும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. பாராளுமன்ற கூட்டுக்குழுவின் விசாரணையில் இருக்கும் வக்பு சட்டத் திருத்த மசோதா மற்றும் ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா போன்றவற்றிற்கு கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில், இந்த கூட்டத்தொடரில் அந்த மசோதாக்கள் முன்வைக்கப்படும் பட்சத்தில் பாராளுமன்ற விவாதம் அனல்பறக்கும். இந்த மசோதாக்களுக்கு எதிர்க்கட்சிகள் தங்களது எதிர்ப்பினை பதிவு செய்யும் என்பதும் நிச்சயம்.

**பிரதமர் மோடி பேச்சு...**

சமீபத்தில் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளையொட்டி, குஜராத்தில் உள்ள அவரது சிலைக்கு பிரதமர் மோடி மரியாதை செலுத்தினார். அதற்குப்பின் பேசிய அவர், "வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும் என்பதே தனது எண்ணம். அதற்காக ஒரே நாடு ஒரே தேர்தல் மற்றும் பொது சிவில் சட்டத்தை விரைந்து கொண்டுவரும் பணிகளில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது" என தெரிவித்திருந்தார். ஒரேநாடு ஒரே தேர்தல் திட்டத்தின் பலன்களில் மிகமுக்கியமானதாக கூறப்படுவது தேர்தல் செலவு குறையும் என்பது. அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் செலவுகள் குறையும், தலைவர்களும் தனித்தனியாக பரப்புரையில் ஈடுபடவேண்டிய சூழல் இருக்காது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் நேரங்களில் நிறுத்தி வைக்கப்படும் மக்களுக்கான பல சேவைகள் தடைபடாது என ஆளும் தரப்பு கூறுகிறது.

**31 பேர் கொண்ட.....**

எதிர்க்கட்சியினர் தரப்பில் இருந்து இந்த திட்டம் பெரும்பாலும் தேசிய கட்சிகளுக்கே அதிக பலன் தரும் என விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் வாக்குப்பதிவு இயந்திரங்கள், தேர்தல் பணியாளர்கள் பற்றாக்குறை போன்ற சிக்கல்கள் ஏற்படும் என எதிர்தரப்பும் விமர்சனங்களை அடுக்குகிறது. அடுத்ததாக வஃக்பு வாரிய சட்டத்திருத்தம். ஆகஸ்ட் 8 அன்று வக்ப் வாரிய சட்டத்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை ஆய்வு செய்வதற்காக 31 பேர் கொண்ட பாராளுமன்ற கூட்டுக்குழுவும் அமைக்கப்பட்டது.

**எதிர்க்கட்சிகள்...**

பாதுகாப்புத்துறை, ரயில்வேக்கு அடுத்தபடியாக அதிகமான சொத்துக்களை வைத்துள்ளதாக கூறப்படும் வக்பு வாரியத்தில் செயல்திறனை மேம்படுத்தவும், வாரியம் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதும் அவசியம் என கருதி மத்திய அரசு இந்த மசோதாவை கொண்டு வந்தது. புதிய விதிமுறைகள் பலவும் இதில் சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால், இஸ்லாமியர்களிடம் இருந்து நிலத்தை அபகரிப்பதற்கு இந்த சட்டத்திருத்தங்களை பாஜக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகிறது. இதுதொடர்பான விவாதங்களும் அரசியல் களத்தை சூடாக்கும்.

**அதானி விவகாரம்...**

இதனிடையே 30 சட்டங்கள் நிலுவையில் உள்ளன. வங்கிச் சட்டங்கள் திருத்த மசோதா 2024, ரயில்வே திருத்த மசோதா 2024, எண்ணெய் வயல்களின் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) திருத்த மசோதா 2024, பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா 2024 உள்ளிட்ட 30 மசோதாக்கள் நிலுவையில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. காப்பீட்டு சேவைகள் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மசோதாவையும் மத்திய பாஜக அரசு கொண்டுவர உள்ளது.

இதனிடையே, மணிப்பூர் விவகாரம், பணவீக்கம், அதானி மீது அமெரிக்காவில் வழக்குப்பதிவு உள்ளிட்ட விவகாரங்களை எதிர்க்கட்சிகள் கையிலெடுக்க திட்டமிட்டுள்ளன.

# வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் 200 தொகுதிகளில் வெல்வதே இலக்கு

## திருமண விழாவில் துணை முதல்வர் உதயநிதி பேச்சு

நாகை, நவ. 25-

**வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகள் என்ற வெற்றி இலக்கை நோக்கி நடைபோடுவோம் என்று திருமணவிழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.**

நாகையில் நடைபெற்ற தி.மு.க. நிர்வாகி இல்ல திருமணவிழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:- திமுக கூட்டணி உடையாதா? என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எதிர்பார்த்து காத்திருக்கிறார். திமுக கூட்டணி கொள்கை கூட்டணி; வெற்றி கூட்டணி; மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய கூட்டணி. கடந்த 3 நாட்களுக்கு முன்னர் அதிமுக பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் பொதுக்கூட்டத்தில் பேசுகையில், கூட்டணிக்கு சேர்பவர்கள் ரூ.200 கோடி கேட்கிறார்கள்; 20 சீட் கேட்கிறார்கள் என கூறுகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மூலமாக 1 கோடியே 16 லட்சம் மகளிர் பயன் அடைகின்றனர். இதனை பல்வேறு மாநிலங்கள் பின்பற்றி வருகின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு வயிற்றெரிச்சல் ஏற்பட்டுள்ளது. மேலும் அரசின் திட்டங்களுக்கு கலைஞர் பெயரை வைப்பதாலும் அவருக்கு வயிற்றெரிச்சல்.

வருகின்ற 2026 தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். நாடாளுமன்ற தேர்தலில் 100 சதவீத வெற்றியை மக்கள் அளித்தார்கள். 2026 சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகள் என்ற வெற்றி இலக்கை நோக்கி நடைபோடுவோம். நாகை மாவட்டம் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் நிறைந்த மாவட்டம். மழை, வெள்ள காலத்தில் மக்களை பாதுகாக்கும் காவலனாக மீனவர்கள் உள்ளனர்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.





**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 1,961.32 | 557.35 |
| பாயிண்ட் 79,117.11 | பாயிண்ட் 23,907.25 |



**தங்கம்**
1 சவரன் ₹57,800
1 கிராம் ₹7,225



**வெள்ளி**
1 கிலோ ₹101,000
1 கிராம் ₹101.00

**டாலர்** ₹84.44

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# அரசு முறை பயணமாக இந்தியா வருகிறார் இங்கிலாந்து மன்னர்

**லண்டன், நவ. 25-**



இங்கிலாந்து மன்னர் சார்லஸ் மற்றும் ராணி கமிலா ஆகியோர் விரைவில் இந்தியா வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

புற்று நோயிலிருந்து விடுபட்டு வரும் இங்கிலாந்து மன்னர் 3-ம் சார்லஸ், பல்வேறு நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில், மன்னர் சார்லசும், ராணி கமிலாவும் இந்தியாவுக்கு வர திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கனவே மன்னரும், ராணியும் இந்தியா வர திட்டமிட்டிருந்த நிலையில், ராணி இரண்டாம் எலிசபெத்தின் மரணம் காரணமாக அந்த திட்டம் கைவிடப்பட்டது.

அப்போதே பிரதமர் மோடியும் மன்னர் மற்றும் ராணிக்கு இந்தியாவில் விருந்தளிக்க விருப்பம் தெரிவித்திருந்திருந்தார். இந்த நிலையில் மன்னர் சார்லஸ் - ராணி கமிலா ஆகியோர் அரசு முறை பயணமாக விரைவில் மீண்டும் இந்தியா வருவதாக அந்த நாட்டு ஊடகங்களில் தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் இங்கிலாந்து அரச தம்பதியின் இந்த பயணத்தின் போது, அவர்கள் பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்துக்கும் செல்வதாக அதில் கூறப்பட்டு உள்ளது. இதுதொடர்பான அந்த ஊடக செய்தியில்,

மன்னர் மற்றும் ராணியின் இந்திய துணைக் கண்ட சுற்றுப்பயண திட்டம் தயாராக உள்ளது. இது உலக அரங்கில் இங்கிலாந்துக்கு மிகப்பெரிய அரசியல் மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

மன்னர் மற்றும் ராணிக்கு இது போன்ற திட்டங்களை உருவாக்க முடிவது மிகவும் ஊக்கமளிக்கிறது. இது அவர்களுக்கு மிகவும் உற்சாகமாக உள்ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### திருவண்ணாமலை கிரிவலப்பாதையில்
# சாமியார்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணி தீவிரம்

**திருவண்ணாமலை, நவ. 25-**

திருவண்ணாமலையில் தங்கியுள்ள சாமியார்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில் பின்புறம் உள்ள மலையை சுற்றியுள்ள கிரிவலப்பாதையில் நாளுக்கு நாள் சாதுக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனிடையே கிரிவலப்பாதையில் போலி சாமியார்கள் நடமாட்டம், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து சாதுக்களுக்கு கியூஆர் கோடுடன் அடையாள அட்டை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் உள்ள சாதுக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் பணியில் மாவட்ட காவல்துறை ஈடுபட்டுள்ளது. சுமார் 300-க்கும் மேற்பட்ட சாமியார்கள் காவல்துறையினரிடம் விண்ணப்பங்கள் அளித்துள்ளனர். அவ்வாறு அளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு அவர்கள் கூறுவது சரியாக உள்ளதா என விசாரணை செய்து சரியான விவரங்கள் கொடுத்த சாமியார்களுக்கு புகைப்படங்களுடன் கூடிய அடையாள அட்டைகளை காவல்துறையினர் வழங்கி வருகின்றனர்.

### முன்னாள் அமைச்சர்கள் நத்தம்விசுவநாதன் - செம்மலை பங்கேற்பு:
# மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் இன்று காலை கள ஆய்வு கூட்டம்
### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ அறிக்கை

**மதுரை, நவ. 25-**



மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் இன்று காலை 9 மணியளவில் கள ஆய்வு கூட்டம் நடக்கிறுது. இதில் முன்னாள் அமைச்சர்கள் நத்தம்விசுவநாதன்,செம்மலை ஆகியோர் பங்கேற்கிறார்கள் என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது குறித்து மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் ஆலோசனைப்படி மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் இன்று 25 - ம் தேதி காலை காமராசர் சாலையில் உள்ள சேம்பர் ஆப் காமர்ஸ் அரங்கத்தில் வருகிற 2026- ம் ஆண்டு நடைபெற இருக்கின்ற சட்டமன்ற பொதுத்தேர்தலில் தி.மு.க.அரசை வீட்டுக்கு அனுப்பி பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான ஆட்சி அமைப்பதற்கு தேர்தல் வியூகம் வகுப்பது தொடர்பாகவும், வட்ட கழகத்தில் புதிய பூத் கிளை அமைப்பது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் ஆணைக்கிணங்க மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க.சார்பில் நடைபெறவுள்ள களஆய்வு ஆலோசனைக்கூட்டத்திற்கு வருகை தரும் அ.தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சருான நத்தம் இரா.விஸ்வநாதன், கழக அமைப்புச்செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செம்மலை ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்ககிறார்கள்.

எனவே இந்த கள ஆய்வுக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், பகுதி சார்பு அணி செயலாளர்கள், நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் என அனைவரும் தவறாது குறித்த நேரத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

# இம்ரான்கான் ஆதரவாளர்கள் போராட்டம்: பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு அமல்

**இஸ்லாமாபாத், நவ. 25-**

இம்ரான்கானை விடுதலை செய்யக் கோரி அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான், பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

தன்னுடைய பிரதமர் பதவிக் காலத்தில், தனக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல் இம்ரான் கான் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் விற்பனை செய்து சொத்து சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

மேலும் பாகிஸ்தான் தூதரகம் அனுப்பிய ரகசிய தகவல்களை கசிய விட்டதாகக் கூறி தொடரப்பட்ட சிபர் வழக்கில் இம்ரான் கான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் சிபர் வழக்கை விசாரித்து வந்த பாகிஸ்தான் கோர்ட்டு கடந்த ஜனவரி 30-ம் தேதி இம்ரான் கானுக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. பரிசுப் பொருட்களை கருவூலத்தில் சேர்க்காமல் விற்று சொத்து சேர்த்த வழக்கில் இம்ரான்கானுக்கு, அவரது மனைவிக்கும் வழங்கப்பட்ட 14 ஆண்டு சிறை தண்டனையை இஸ்லாமாபாத் ஐகோர்ட்டு நிறுத்தி வைத்து உத்தரவிட்டது.

இதையடுத்து, அரசு பரிசுப் பொருட்களை விற்று சொத்து சேர்த்த வழக்கில் தனக்கு ஜாமீன் வழங்கக் கோரி இஸ்லாமாபாத் ஐகோர்ட்டில் இம்ரான் கான் மேல்முறையீடு செய்திருந்தார்.

அந்த மனு மீதான விசாரணை கடந்த 20-ம் தேதி நடைபெற்றது. அப்போது, முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு ஜாமீன் வழங்கி கோர்ட்டு உத்தரவிட்டது. ஆனால், இம்ரான் கானுக்கு ஜாமீன் வழங்கப்பட்ட ஒரு மணி நேரத்திலேயே, ராவல் பிண்டி போலீசார் அவரை கைது செய்தனர்.

இம்ரான் கான் மீது பயங்கரவாதம் மற்றும் பிற குற்றச்சாட்டுகள் தொடர்பாக நியூடவுன் காவல் நிலையத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. அதன் அடிப்படையில், இம்ரான் கானுக்கு ஜாமீன் வழங்கிய ஒரு மணி நேரத்திற்குள்ளே அவர் மீண்டும் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவரை விடுதலை செய்ய கோரி இம்ரான்கான் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக நாடு முழுவதும் அவர்கள் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக லாகூர், பெஷாவர் ஆகிய நகரங்களை தலைநகர் இஸ்லாமாபாத்துடன் இணைக்கும் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டு உள்ளன. இதன்மூலம் தலைநகருக்குள் போராட்டக்காரர்கள் நுழைவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

மேலும் முக்கிய நகரங்களில் ஆயிரக்கணக்கான ராணுவ வீரர்கள், போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டு உள்ளன. அதே போல் பஞ்சாப் மாகாணத்தில் 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டு உள்ளது.

# காலநிலை நிதி ஒப்பந்தத்திற்கு 300 பில்லியன் டாலர் ஒதுக்கீடு
### இந்தியா நிராகரிப்பு

**பாகு (அசர்பைஜான்), நவ. 25-**

300 பில்லியன் டாலர் என்பது மிக குறைவு என்று காலநிலை நிதி ஒப்பந்தத்தை இந்தியா நிராகரித்துள்ளது.

வளரும் நாடுகள் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நிர்வகிப்பதற்கும், பிரச்சினைகளை சமாளிப்பதற்கும் தேவையான நிதியுதவிகள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை வளர்ந்த நாடுகள் வழங்குகின்றன. இதற்காக ஐ.நா. காலநிலை நிதி தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிதி தொகுப்பு தொடர்பாக ஐ.நா. காலநிலை மாநாட்டில் ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அவ்வகையில், காலநிலை நிதியில் இருந்து ஆண்டுக்கு 100 பில்லியன் டாலர் வழங்க கடந்த 2009-ல் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், அசர்பைஜானில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாநாட்டின் நிறைவு நாளான நேற்று காலநிலை நிதி தொகுப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையின் முடிவில், காலநிலை நிதி தொகுப்பை மூன்று மடங்காக உயர்த்த தீர்மானிக்கப்பட்டது. அதாவது, காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவதற்கு 2035-ம் ஆண்டு வரை ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 300 பில்லியன் டாலர்களை ஒதுக்க முடிவு செய்யப்பட்டது.

ஆனால், இந்த ஒப்பந்தத்தை இந்தியா நிராகரித்தது. மாநாட்டின் நிறைவு விழாவில் இந்தியா சார்பில் பொருளாதார விவகாரத்துறை ஆலோசகர் காந்தினி ரெய்னா பேசும்போது, காலநிலை நிதி ஒப்பந்த செயல்முறை நியாயமற்றது என்றும், இந்த நிதி மிகக் குறைவு என்றும் கூறினார். அவர் மேலும் பேசியதாவது., ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வது தொடர்பாக முடிவு எடுப்பதற்கு முன்னர் நாங்கள் அறிக்கை வெளியிட விரும்புவதாக கோரிக்கை விடுத்திருந்தோம். இருப்பினும், மேடையில் வைத்து மட்டும் எடுக்கப்பட்ட இந்த முடிவு ஏமாற்றம் அளிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

# மகாராஷ்டிராவில் எதிர்பாராத ஒரு வெற்றியை பா.ஜ.க. பெற்றுள்ளது
### வி.சி.க. தலைவர் திருமாவளவன் அறிக்கை

**சென்னை, நவ. 25-**

மராட்டியத்தில் பா.ஜ.க.வே எதிர்பாராத ஒரு வெற்றியை பெற்றுள்ளது என்று தெரிவித்த திருமாவளவன், பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்குகளை எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கேரளாவில் உள்ள வயநாடு நாடாளுமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ள பிரியங்கா காந்திக்கும், ஜார்கண்ட் மாநிலத்தில் மீண்டும் ஆட்சி அமைத்துள்ள ஹேமந்த் சோரனுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாடாளுமன்ற மக்களவைக்கு பிரியங்கா காந்தி வரப்போவது இந்தியா கூட்டணிக்கு மேலும் வலிமையைத் தரும். அதைபோல ஜார்கண்ட் மாநில முதல்-மந்திரி ஹேமந்த் சோரன் மீது பொய் வழக்குகளைப் போட்டு மத்திய பா.ஜ.க. அரசு கைது செய்து சிறையில் அடைத்தது. குறுக்கு வழியில் அவரது முதல்-மந்திரி பதவியைப் பறித்தது. இந்தச் சதிகளையெல்லாம் தாண்டி மக்கள் ஆதரவோடு ஹேமந்த் சோரன் மீண்டும் ஆட்சி அமைத்திருக்கிறார்.

மராட்டிய மாநிலத்தில் தலித் வாக்குகள் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. தலித் வாக்குகள் இந்தியா கூட்டணிக்குச் செல்லாமல் சிதறடிக்கும் விதமாக எல்லா தொகுதிகளிலும் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியும், பிரகாஷ் அம்பேத்கர் தலைமையிலான வி.பி.ஏ. கூட்டணியும் வேட்பாளர்களை நிறுத்தின. பா.ஜ.க. கூட்டணி, காங்கிரஸ் கூட்டணி இரண்டையும் எதிர்ப்பதாக அவர்கள் சொல்லிக் கொண்டாலும் "பா.ஜ.க.வுக்கு ஆதரவாகத் தலித் வாக்குகளைப் பிரிப்பதற்குத்தான் அவர்கள் வேட்பாளர்களை நிறுத்தினார்கள்" என்னும் விமர்சனம் பரவலாக உள்ளது. இது அறிந்தோ அறியாமலோ பா.ஜ.க.வுக்குத் துணைபோகும் அவலம் ஏற்பட்டுள்ளது.

மராட்டியத்தில் பா.ஜ.க.வே எதிர்பாராத ஒரு வெற்றியை அது பெற்றுள்ளது. இந்த வெற்றி மோடி -அமித்ஷா- அதானி கூட்டணிக்குக் கிடைத்த வெற்றி என உத்தவ் தாக்கரே கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர் சஞ்சய் ராவத் கூறியிருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியாவின் வாக்கு எண்ணும் முறைக்கு எலான் மஸ்க் பாராட்டு

**வாஷிங்டன், நவ. 25-**

இந்தியாவில் ஒரே நாளில் 64 கோடி ஓட்டுகள் எண்ணி முடிக்கப்பட்டு விட்டன. ஆனால் கலிபோர்னியாவில் இன்னும் எண்ணப்படுகின்றன என்று இந்தியாவில் வாக்கு எண்ணும் முறைக்கு எலான் மஸ்க் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் கடந்த 5-ம் தேதி நடந்தது. இதில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிட்ட டிரம்ப் வெற்றி பெற்றார். இதற்கிடையே அமெரிக்காவில் அதிக மக்கள் தொகை கொண்ட (3.9 கோடி பேர்) கலிபோர்னியா மாகாணத்தில் செனட் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் மைக்கேல் ஸ்டீல், ஜனநாயகக் கட்சி சார்பில் டெரெக் டிரான் போட்டியிட்டனர்.

தேர்தல் நடந்து 2 வாரங்களுக்கு மேலாகியும் வெற்றியாளர் முடிவு செய்யப்படவில்லை. இன்னும் 3 லட்சம் வாக்கு எண்ணப்பட வேண்டும். இது குறித்து, எலான் மஸ்க் தனது டுவிட்டர் பக்கத்தில், இந்தியாவில் ஒரே நாளில் 64 கோடி ஓட்டுகள் எண்ணி முடிக்கப்பட்டு விட்டன. கலிபோர்னியாவில் இன்னும் எண்ணப்படுகின்றன என்று தெரிவித்து உள்ளார். கலிபோர்னியாவில் அதிகளவில் தபால் ஓட்டுகள் பதிவானது. இதில் அந்த ஓட்டுச்சீட்டை அனுப்பியது உண்மையான வாக்காளர்தானா என்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். ஒவ்வொரு தபால் வாக்குச் சீட்டும் தனிப்பட்ட சரிபார்ப்புக்கு உட்படுத்தப்பட வேண்டும். இதனால் முடிவு அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**25-11-2024**




**மேஷம்:-** நல்ஆரோக்கியம், நண்பர்கள் சந்திப்பு, திருமணம் மற்றும் நல்முன்னேற்றம் ஆகியவை ஏற்படும். பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். எல்லா வகையிலும் ஏற்றந்தரும் நாள்.

**ரிஷபம்:-** மனைவி, மக்களின் உடல் நிலையைப் பொருத்தவரை அக்கறைப் படவேண்டிய நாள். மேலதிகாரிகள் மற்றும் பெரியவர்களிடம் வாக்குவாதம் செய்யாமல் பணிந்து போவது நல்லது.

**மிதுனம்:-** சுமாரான நாள். இன்றைய நாள் கழிவது யுகங் கழிவது போன்றிருக்கும். தாயின் உடல் நிலையில் அதிக அக்கறை கொள்ளுங்கள். நிம்மதியான தூக்கம் இராது.

**கடகம்:-** புதிய கலைப் பயிற்சிகளிலும், கல்வியிலும் தேர்ச்சி ஏற்படும். சாதுர்யமான வாக்கு வன்மையால் சம்பாத்தியம் உயரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் திருப்திகரமான வரவால் சந்தோஷம் நிலவும்.

**சிம்மம்:-** சிலருக்குத் தேவையற்ற விவகாரங்களால் மன நிம்மதி குறையலாம். எடுத்த காரியங்கள் ஏற்றம் தராது என்பதால், ஒத்திப் போடுவது நல்லது. கடின உழைப்பே கல்வியில் தேர்ச்சி அளிக்கும்.

**கன்னி:-** நல்ஆரோக்கியம், சந்ததி விருத்தி, மந்திர சித்தி, பதவி உயர்வு என இராஜயோகம் தரும் நாள். வாக்கு வன்மையால் வருமானம் பெருகும். பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:-** குடும்பத்தாருடன் அனுசரித்துச் செல்வது குழப்பங்களைத் தீர்க்கும். சோகமான நாளாக இல்லையெனினும், சுகமான நாளாக இருக்காது. பெண்களின் பிடிவாதத்தால் வீண்விரயங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:-** பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும். காரிய வெற்றியால் களிப்பு உண்டாகும். அரசு ஆதரவும், கல்வியில் தேர்ச்சியும் ஏற்படும். தன்னம்பிக்கை, மற்றும் தைரியம் அதிகரிக்கும்.

**தனுசு:-** காரியங்கள் அனைத்திலும் எளிதில் வெற்றி கிட்டும். அரசு ஆதரவால் அதிகாரம் மிக்க பதவி உயர்வு கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி உண்டு. தன்னம்பிக்கை, தைரியம் அதிகரிக்கும்.

**மகரம்:-** தெய்வ சிந்தனை அதிகரிக்கும் நாள். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். கோவில், குளம் போன்ற திருப்பணிகளில் ஈடுபடுவதால், புகழ் ஓங்கும்.

**கும்பம்:-** கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும். பணியிட மாற்றங்களை எதிர்பார்க்கலாம். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகும்.

**மீனம்:-** தொட்டதெல்லாம் துலங்கி பல வழிகளிலும் பணம்வரும். பெண் சுகம் கூடும். மாணவர்களுக்குக் கல்வியில் தேர்ச்சி ஏற்படும்.வியாபாரத்தில் திருப்திகரமான வரவால் சந்தோஷம் நிலவும்.

### தடை செய்யப்பட்ட வலைகளில் மீன்பிடித்த
# தூத்துக்குடி மீனவர்களின் வலைகள், படகு பறிமுதல்

**ராமநாதபுரம், நவ. 25-**

ராமநாதபுரத்தில் தடை செய்யப்பட்ட வலைகளில் மீன்பிடித்த தூத்துக்குடி மீனவர்கள் - படகு, வலைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

கடல்வளத்தை சீரழிக்கும் வகையில் உள்ள இரட்டை சுருக்குமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க கூடாது என அரசு தடை செய்துள்ள நிலையில், ஒரு சில மீனவர்கள் அதிகாரிகளுக்கு தெரியாமல் இரட்டை சுருக்குமடி வலையை பயன்படுத்தி வருகின்றனர். இது தொடர்பாக மீன்வளத்துறை அதிகாரிகளிடம் தொடர்ந்து புகார்கள் அளிக்கப்பட்டு வந்தன.

இரு தினங்களுக்கு முன்பு ராமேஸ்வரத்தில் இரட்டை சுருக்குமடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. இந்த நிலையில், இன்று ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அருகே உள்ள ரோஸ்மாநகர் பகுதியில், தூத்துக்குடியை சேர்ந்த மீனவர்கள் சிலர் இரட்டை சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன்பிடிப்பதாக மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் அங்கு விரைந்து சென்ற அதிகாரிகள், இரட்டை சுருக்குமடி வலையை பயன்படுத்தி மீன்பிடித்த 23 மீனவர்களின் வலைகள் மற்றும் 2 நாட்டுப் படகுகளை பறிமுதல் செய்தனர். தொடர்ந்து இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

# லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 15 பேர் பலி

**பெய்ரூட், நவ. 25-**

லெபனான் தலைநகர் பெரூட்டில் இஸ்ரேல் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த ஆண்டு அக்டோபர் 7-ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்.

மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 117 பணய கைதிகளை உயிருடன் மீட்டுள்ளது. அதே போல், ஹமாஸ் ஆயுதக் குழுவினர்களால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட பணய கைதிகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. ஆனால், 101 இஸ்ரேலியர்கள் ஹமாஸ் வசம் பணய கைதிகளாக உள்ளனர் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இதில், பலர் உயிரிழந்திருக்கலாம் எனவும் தகவல் வெளியாகியிருந்தது. அதே வேளை, இந்த போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் உள்பட 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அதே போல், மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டை கடந்து நீடித்து வருகிறது. அதே போல், லெபானானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேல் மீது ஓராண்டுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகிறது.

லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாத அமைப்பினரை குறிவைத்தும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. லெபனானுக்குள் புகுந்தும், வான்வழி மூலமாகவும் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், லெபனான் தலைநகர் பெரூட்டில் இஸ்ரேல் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 15 பேர் உயிரிழந்தனர். மேலும், 63 பேர் காயமடைந்தனர்.

# தேசிய மாணவர் படை தினம்: சென்னை போர் வீரர்கள் நினைவிடத்தில் மரியாதை

**சென்னை, நவ. 25-**

தேசிய மாணவர் படை தினத்தையொட்டி சென்னையில் உள்ள போர் வீரர்கள் நினைவிடத்தில் நேற்று மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டது.

உலகின் மிகப்பெரிய இளைஞர் அமைப்பாக விளங்கும் என்.சி.சி. எனப்படும் தேசிய மாணவர் படை அமைப்பு 1948-ம் ஆண்டு நவம்பர் 24-ம் தேதி உருவாக்கப்பட்டது. அதன் 76-வது ஆண்டுவிழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, சென்னை போர் வீரர்கள் நினைவிடத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய ராணுவ தெற்கு பகுதி தளபதி லெப்டினண்ட் ஜெனரல் கரன்பீர்சிங் பிரார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பாண்டு வாத்தியம் முழங்க மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

முன்னதாக நிகழ்ச்சிக்கு வந்த லெப் ஜெனரல் கே. எஸ். பிராரை, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் உள்ளடக்கிய என்.சி. சி அமைப்பின் துணை தலைமை இயக்குநர் கமொடோர் எஸ்.ராகவ் வரவேற்றார்.

என்.சி.சி. கமாண்டர்கள் மற்றும் உயரதிகாரிகளுக்கு, கே. எஸ். பிரார், அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். இந்த நிகழ்ச்சியின் ஒரு அம்சமாக சென்னையை மையமாக கொண்ட என்.சி.சி. 13-வது பட்டாலியன் இளம் வீரர்கள் குழுவினர், கம்பீரமாக அணிவகுப்பு நடத்தினர்.

### பொங்கல் அன்று சி.ஏ. தேர்வுகள்:
# எதிர்க்கட்சிகள் விமர்சனத்துக்கு நிர்மலா சீதாராமன் விளக்கம்

**சென்னை, நவ. 25-**

பொங்கல் பண்டிகை தினத்தன்று சி.ஏ. தேர்வுகள் நடத்தப்படுவது குறித்த எதிர்க்கட்சிகளின் விமர்சனத்துக்கு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் அளித்துள்ளார்.

மதுரை எம்.பி. சு. வெங்கடேசன் நேற்று வெளியிட்டிருந்த டுவிட்டர் பதிவில், பொங்கல் திருநாள் அன்று தேர்வுகள். எத்தனை முறை சொன்னாலும் திருந்தப் போவதில்லை. அதற்காக நாம் ஓயப்போவதுமில்லை.

மத்திய அரசே, தேர்வு தேதியை உடனே மாற்று. தமிழ்ப் பண்பாட்டை அவமதிக்கும் செயலை கைவிடு.சி ஏ பவுண்டேஷன் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள தேர்வர்களின் பெற்றோர் பலர் என்னைத் தொடர்பு கொண்டனர்.

தமிழகத்தின் மக்கள் திருவிழாவான பொங்கல் அன்றும், உழவர் திருநாள் அன்றும் தேர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அறுவடைத் திருநாளான பொங்கல் திருவிழா என்பது தமிழகத்தின் தனித்துவமிக்க பண்பாட்டுத் திருவிழா என்பதை கருத்தில் கொண்டு தேர்வர்களுக்கு சிரமங்கள் இன்றி தேர்வு அட்டவணையை மாற்றி அமைக்குமாறு மத்திய நிறுவன விவகாரத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும், ஐ.சி.ஏ.ஐ. தலைவர் சி.ஏ. ரஞ்சித் குமார் அகர்வாலுக்கும் கடிதம் எழுதியுள்ளேன் என்று அதில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் பொங்கல் அன்று அறிவிக்கப்பட்ட சி.ஏ. தேர்வு தொடர்பாக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் விமர்சனம் செய்துள்ளார். சி.ஏ. தேர்வுகளை மத்திய அரசு நடத்தவில்லை.

ஐ.சி.ஏ.ஐ. என்ற சுதந்திரமான அமைப்பு நடத்துவதாக குறிப்பிட்டுள்ள பா.ஜ.க. நிர்வாகியின் பதிவை மேற்கோள் காட்டி, தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், சரியாகவும், விளக்கமாகவும் பதில் சொல்லியிருக்கிறீர்கள். எதில் பார்த்தாலும், எப்ப பார்த்தாலும் தமிழ் விரோதி பிரச்சாரம் சிலருக்கு பழக்கமாகி விட்டது போலும் என்று அதில் தெரிவித்துள்ளார்.

# அதானி மீதான குற்றச்சாட்டு: சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல்

**புதுடெல்லி, நவ. 25-**

அதானி மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த உத்தரவிடக் கோரி சுப்ரீம்கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் பிரபல தொழில் அதிபரும், உலகின் முன்னணி பணக்காரருமான கவுதம் அதானி, இந்தியா மட்டுமின்றி பல்வேறு வெளிநாடுகளிலும் ஏராளமான தொழில்களை நடத்தி வருகிறார்.

ஏராளமான வெளிநாட்டு முதலீட்டாளர்களும் அவரது நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளனர். அந்த வகையில் அதானியின் சூரிய மின்சக்தி நிறுவனம் தயாரிக்கும் மின்சாரத்தை வினியோகிப்பதற்கான ஒப்பந்தத்தை பெறுவதற்காக ஆந்திரா, ஒடிசா, தமிழ்நாடு, காஷ்மீர், சத்தீஷ்கார் மாநிலங்களில் அரசு அதிகாரிகளுக்கு ரூ.2 ஆயிரம் கோடிக்கு மேல் லஞ்சம் கொடுத்துள்ளார் என அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் இதை மறைத்து அமெரிக்கர்களிடம் இருந்து அதிகளவிலான முதலீடுகளை பெற்றுள்ளதாகவும், இது அமெரிக்க சட்டத்துக்கு எதிரானது என்றும் அமெரிக்காவின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையம் (எஸ்.இ.சி.) சார்பில் நியூயார்க் பெடரல் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மேலும் அதானியின் மருமகனும், அதானி கிரீன் எனர்ஜி நிறுவன செயல் இயக்குனருமான சாகர் அதானி உள்பட 7 பேர் மீதும் லஞ்சம் மற்றும் கடன் பத்திர மோசடி தொடர்பாக தனித்தனியாக குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்கில் அதானிக்கு எதிராக அமெரிக்க கோர்ட்டு பிடிவாரண்டு பிறப்பித்து உள்ளது. இந்த சூழலில் நியூயார்க் கிழக்கு மாவட்ட கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கில் அதானி மற்றும் அவரது மருமகன் சாகருக்கு சம்மன் அனுப்பப்பட்டது.

நியூயார்க் கோர்ட்டு மூலம் அனுப்பப்பட்ட இந்த சம்மனுக்கு பதிலளிக்க தவறினால், புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கான தீர்ப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே தங்கள் மீதான இந்த குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படை ஆதாரமற்றவை எனவும், அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டுகளை சட்டப்படி எதிர்கொள்வோம் என்றும் அதானி குழுமம் அறிவித்து இருந்தது.

இந்நிலையில் அதானி மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்த உத்தரவிடக்கோரி சுப்ரீம்கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதன்படி அதானி - ஹிண்டன்பர்க் தொடர்பான வழக்கில் புதிய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஹிண்டன்பர்க் விவகாரத்திற்கும் தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தேச நலனை கருத்தில் கொண்டு உடனடியாக முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என்று வழக்கறிஞர் விஷால் திவாரி தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# உ.பி.யில் மசூதியில் ஆய்வுக்கு சென்ற அதிகாரிகள் மீது தாக்குதல்
## போராட்டக்காரர்கள் மீது போலீசார் துப்பாக்கிச்சூடு

**லக்னோ, நவ. 25-**

உ.பி. மாநிலம் சம்பல் பகுதியில் உள்ள மசூதியில் ஆய்வுக்கு சென்ற அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திய போராட்டக்காரர்களை போலீசார் துப்பாக்கிச்சூடு நடத்தி கலைந்து போக செய்தனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் சம்பல் பகுதியில் ஷாஜி ஜமா மஸ்ஜித் என்ற மசூதி உள்ளது. மொகலாயர்களின் ஆட்சிக் காலத்தில் இந்து கோவிலை இடித்து இந்த மசூதியை கட்டியிருப்பதாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவின்பேரில் மசூதியை ஆய்வு செய்ய அதிகாரிகள் குழு அமைக்கப்பட்டது. நீதிமன்ற உத்தரவுப்படி இந்த குழுவினர் நேற்று காலையில் மசூதியை ஆய்வு செய்ய சென்றனர். பாதுகாப்புக்காக போலீசாரும் சென்றனர்.

அப்போது மசூதி அருகே நூற்றுக்கணக்கானோர் திரண்டு வந்து, மசூதியில் ஆய்வு செய்ய எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்களை கலைந்து செல்லும்படி போலீஸ் அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

ஆனால் தொடர்ந்து முழக்கமிட்ட போராட்டக்காரர்கள், வன்முறையில் ஈடுபட்டனர். அதிகாரிகள் மீது கற்களை வீசி தாக்கினர். வாகனங்களுக்கும் தீ வைத்தனர். இதனால் பதற்றம் உருவானது.

இதையடுத்து போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் துப்பாக்கி சூடு நடத்தியும் போராட்டக்காரர்களை கலைத்தனர். அதன் பின்னர் நிலைமை கட்டுக்குள் வந்தது. அதிகாரிகள் மசூதிக்குள் சென்று ஆய்வு செய்தனர்.

கடந்த சில தினங்களாகவே அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால் வன்முறை சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதற்காக போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர். 5 நபர்களுக்கு மேல் ஒன்றுகூட தடை விதிக்கப்பட்டுள்ளது.

தடையை மீறி நேற்று வன்முறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த 19-ம் தேதியும் பலத்த பாதுகாப்புடன் மசூதியில் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது மசூதி நிர்வாக கமிட்டி உறுப்பினர்களும் உடனிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது இது குறித்து காவல்துறை இயக்குநர் (டி.ஜி.பி) பிரசாந்த் குமார் கூறுகையில்,

நீதிமன்ற உத்தரவின்படி, சம்பாலில் உள்ள மசூதியில் இந்த ஆய்வு நடத்தப்படுகிறது. நேற்று காலையில் ஆய்வு நடத்த வந்த குழுவினர் மீது சில சமூக விரோதிகள் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர்.

காவல் துறையினர் மற்றும் மூத்த அதிகாரிகள் சம்பவ இடத்தில் தற்போது உள்ளனர். நிலைமை இப்போது கட்டுக்குள் உள்ளது. கற்களை வீசியவர்களை அடையாளம் கண்டு அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

### கல்வி கட்டமைப்பை அழிக்கக்கூடியது:
## நீட் தேர்வு குறித்து சபாநாயகர் அப்பாவு

**சென்னை, நவ. 25-**

நீட் தேர்வு தேவையில்லை என்பதே அனைவரின் கருத்தாகவும் உள்ளது என சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;- "நாட்டில் இருக்கும் ஒரு சட்டத்திற்கு எதிர்கருத்துதான் சொல்ல முடியுமே தவிர, நாம் அதற்கு எதிரானவர்கள் கிடையாது. மத்திய அரசு நீட் தேர்வுக்கு சட்டம் கொண்டு வந்துவிட்டது.

அந்த நீட் தேர்வு தேவையில்லை என்பதே முதல்-அமைச்சர், அமைச்சர்கள் உள்பட அனைவரின் கருத்தாகவும் உள்ளது. தமிழ்நாட்டின் கல்வி கட்டமைப்பை அழிக்கக் கூடியது நீட் தேர்வு. 12-ம் வகுப்பு தேர்வில் கிடைக்கும் மதிப்பெண் அடிப்படையில் மாணவர்களுக்கு மருத்துவ இடம் கொடுப்பதே நியாயமானது. இவ்வாறு அப்பாவு தெரிவித்தார்.

# அ.தி.மு.க.வின் பிரம்மாஸ்திரம் இரட்டை இலை: ரஜினிகாந்த்

**சென்னை, நவ. 25-**

அ.தி.மு.க.வின் பிரம்மாஸ்திரம் இரட்டை இலை. அந்த இரட்டை இலை கிடைப்பதற்கு ஜானகி அம்மாள் மிகப் பெரும் தியாகம் செய்தார் என்று ரஜினிகாந்த் புகழாரம் சூட்டினார்.

தமிழகத்தின் முதல் பெண் முதல்வரும், எம்.ஜி.ஆரின் மனைவியுமான மறைந்த ஜானகியின் நூற்றாண்டு விழா, அ.தி.மு.க. சார்பில் வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் மண்டபத்தில் நேற்று காலை நடந்தது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டு, ஜானகியுடன் பயணித்தவர்களுக்கு நினைவுப் பரிசுகளையும் அவர் வழங்கினார். அதனை தொடர்ந்து ஜானகி ராமச்சந்திரனின் திருவுருவப் படத்தை எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்.

இந்நிலையில் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எம்.ஜி.ஆர். - ஜானகியின் நினைவுகளை வீடியோவில் நடிகர் ரஜினிகாந்த் பகிர்ந்த வீடியோ ஒளிபரப்பப்பட்டது. இதுதொடர்பான அந்த வீடியோவில்,

எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு ஜானகி அம்மையார் அரசியலுக்கு வந்தது பொலிடிக்கல் ஆக்சிடெண்ட். அவருக்கு ஈடுபாடு இல்லை. சூழ்நிலைக் கைதியாக அரசியலுக்கு வந்தார்.

ஜானகி மிகுந்த தைரியத்துடன் முடிவு எடுப்பவர். யாருடைய ஆலோசனையையும் கேட்காமல் அரசியல் தனக்கு சரிபட்டு வராது. நீங்கள்தான் சரியானவர் என முடிவு செய்து, ஜெயலலிதாவிடம் கட்சியை ஒப்படைத்தார்.

அ.தி.மு.க. நலனுக்காக கட்சியை விட்டுக் கொடுத்தவர் ஜானகி ராமச்சந்திரன். அ.தி.மு.க. இரண்டாக பிளவுபட்ட போது, ஜெயலலிதா அம்மையாரிடம் கட்சியை ஒப்படைத்தது அவரின் நல்ல குணம், பக்குவத்தை உணர்த்தியது.

திரைப்படத்தில் புகைப்பிடிக்கும் காட்சிகளில் நடிப்பதை தவிர்க்க வேண்டும் என்று எம்.ஜி.ஆர். கூறியதாக ஜானகி அம்மையார் என்னிடம் தெரிவித்தார். 2017-ல் நான் அரசியலுக்கு வருவதாக சொன்னேன். அப்போது நிறைய பேர் என்னை சந்தித்து ஆலோசனை சொன்னார்கள்.

அந்த ஆலோசனையெல்லாம் கேட்டால், நாம் நிம்மதி எல்லாம் இழந்து, எல்லாத்தையும் இழக்க வேண்டியதுதான். அ.தி.மு.க.வின் பிரம்மாஸ்திரம் இரட்டை இலை. அந்த இரட்டை இலை கிடைப்பதற்கு ஜானகி அம்மாள் மிகப் பெரும் தியாகம் செய்தார்.

அவருக்கு இந்த நூற்றாண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடுவதை வரவேற்கிறேன். இந்த விழாவுக்கு என்னுடைய வாழ்த்துகள் என்று அவர் கூறினார். ரஜினிகாந்த்தை தொடர்ந்து தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேசிய வாழ்த்து வீடியோவும் ஒளிபரப்பப்பட்டது.

# தனது திருவுருவ சிலையை தானே திறந்து வைத்த மே.வங்க கவர்னர்

**கொல்கத்தா, நவ. 25-**

2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்கு வங்க கவர்னராக சி.வி.ஆனந்த போஸ் நியமிக்கப்பட்டார். மேற்கு வங்க கவர்னராக நியமிக்கப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடைந்ததை ஒட்டி ராஜ் பவனில் தனது திருவுருவ சிலையை சி.வி.ஆனந்த போஸ் திறந்து வைத்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ராஜ்பவனில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான ஓவிய போட்டியின் தொடக்க விழாவை முன்னிட்டு தனது திருவுருவ சிலை சி.வி.ஆனந்த போஸ் திறந்து வைத்தார். இது தொடர்பான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகின.

தனது திருவுருவ சிலையை சி.வி.ஆனந்த போஸ் திறந்து வைத்ததை திரிணாமுல் காங்கிரஸ், காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளன. இது தொடர்பாக திரிணாமுல் செய்தித் தொடர்பாளர் ஜெய்பிரகாஷ் கூறுகையில்,

நம் கவர்னர் சி.வி.ஆனந்த் போஸ் அவரது சிலையை திறந்து வைத்துள்ளார். அவருக்கு விளம்பரம் வேண்டும் என்பதற்காக இதை செய்துள்ளார். அவர் தனது சிலைக்கு மாலை அணிவிப்பாரா? இது தன்னை தானே உயர்வாக நினைக்கும் மனப்பான்மை என்று தெரிவித்துள்ளார்.

### மறைந்த ஜானகி ராமச்சந்திரனின்
# நூற்றாண்டு விழாவை துவக்கி வைத்தார் எடப்பாடி பழனிசாமி

**சென்னை, நவ. 25-**

ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜானகி ராமச்சந்திரனின் திருவுருவப் படத்தை எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார்.

தமிழகத்தின் முதல் பெண் முதல்வரும், எம்.ஜி.ஆரின் மனைவியுமான மறைந்த ஜானகியின் நூற்றாண்டு விழா வானகரத்தில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இந்த விழாவை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.

விழாவில், ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழா மலரை அவர் வெளியிட்டார். அந்த மலரை எம்.ஜி.ஆரின் வளர்ப்பு மகள் சுதா பெற்றுக் கொண்டார். மேலும் ஜானகியுடன் பயணித்தவர்களுக்கு நினைவு பரிசுகளையும் வழங்கினார்.

அதனை தொடர்ந்து ஜானகி ராமச்சந்திரனின் திருவுருவப் படத்தை எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார். இந்தப்படம் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட உள்ளது.

### 3.8 ரிக்டர் அளவில்
# அசாமில் லேசான நிலநடுக்கம்

**திஸ்பூர், நவ. 25-**

அசாமில் ரிக்டர் 3.8 அளவில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

அசாம் மாநிலம் திமா ஹாசோ பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.05 மணிக்கு லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.8 ஆக பதிவாகி உள்ளதாக தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தின் மையமானது தரைமட்டத்தில் இருந்து சுமார் 10 கி.மீ. ஆழத்தில் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### எதிர்க்கட்சி தலைவர் பதவி யாருக்கும் இல்லை:
# மகாராஷ்டிராவில் முதல்முறையாக 60 ஆண்டுகளில் இல்லாத நிலை

**மும்பை, நவ. 25-**

மகாராஷ்டிரா சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவர் பதவி யாருக்கும் கிடைக்க வாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா தேர்தல் வரலாற்றில் இதுவரை கண்டிராத அளவுக்கு மாபெரும் வெற்றியை பாஜக தலைமையிலான மகாயுதி கூட்டணி பெற்றுள்ளது. இதில், தனிப்பெரும் கட்சியாக அதிக இடங்களில் பாஜக வென்றுள்ளது. பெரும்பான்மைக்கு 145 இடங்கள் தேவை என்ற நிலையில், மகாயுதி கூட்டணி 234 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதில் பாஜக மட்டும் 132 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உள்ளது. சிவசேனா 57, மற்றும் தேசியவாத காங்கிரஸ் 41 இடங்களில் வென்றன. எதிர்க்கட்சிகளின் மகாவிகாஸ் அகாடி கூட்டணி

உத்தவ் தாக்கரே கட்சி 20 இடங்களிலும், காங்கிரஸ் கட்சி 16 இடங்களிலும் சரத் பவார் கட்சி 10 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. இதன்படி பார்த்தால் மகராஷ்டிராவில், எதிர்க்கட்சி தலைவர் அந்தஸ்து யாருக்கும் கிடைக்க வாய்ப்பு இல்லாத நிலை உள்ளது. மொத்த இடங்களில் 10 சதவீத இடங்களில் வெற்றி பெறும் கட்சிக்கு எதிர்க்கட்சி தலைவர் பொறுப்பு கிடைக்கும். ஆனால், தற்போது எதிர்க்கட்சி வரிசையில் உள்ள எந்தக் கட்சியும் 28 இடங்களை வெல்லவில்லை.

இதனால், மகராஷ்டிரா வரலாற்றில் 60 ஆண்டுகளில் முதல் முறையாக எதிர்க் கட்சி தலைவர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

### தொடர்ந்து 8 முறை எம்.எல்.ஏ.:
# 9-வது வெற்றியை தவறவிட்ட மகாராஷ்டிரா காங். தலைவர்

**மும்பை, நவ. 25-**

8 முறை தொடர் வெற்றி பெற்ற மராட்டிய காங். தலைவர் . 9-வது முறை சிவசேனா வேட்பாளரிடம் தோல்வியடைந்தார்.

மராட்டிய மாநிலத்தில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான மகாயுதி கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துள்ளது. காங்கிரஸ் தலைமையிலான மகா விகாஸ் அகாடி கூட்டணி தோல்வியடைந்தது.

தோல்வியடைந்த காங்கிரஸ் வேட்பாளர்களில் அக்கட்சியின் மூத்த எம்.எல்.ஏ.வும், சட்டமன்ற கட்சி தலைவருமான பாலாசாகேப் தோரட்டும் (வயது 71) ஒருவர். சங்கம்னர் தொகுதியில் தொடர்ந்து 8 முறை வெற்றி பெற்ற தோரட், இந்த முறை சிவசேனா (ஷிண்டே அணி) வேட்பாளர் அமோல் காட்டலிடம் 10,560 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

1985-ம் ஆண்டு சங்கம்னர் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்டு முதல் முறையாக எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டார் பாலாசாகேப் தோரட். அதன்பின்னர் அடுத்தடுத்த தேர்தல்களில் காங்கிரஸ் சார்பில் வெற்றி பெற்று சட்டசபைக்கு சென்ற இவர், கட்சியின் தவிர்க்க முடியாத தலைவராக விளங்கினார்.

கடந்த முறை இவரது தலைமையில் காங்கிரஸ் கட்சி தேர்தலை சந்தித்தது. அப்போது காங்கிரஸ் கட்சி 44 இடங்களை வென்றிருந்தது. அதன்பின், மக்களவை தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததால் மாநில தலைவர் பதவியை ராஜினாமா செய்தார் தோரட். அசோக் சவான் தலைவராக நியமிக்கப்பட்டார்.

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் நிரந்தர அழைப்பாளரான தோரட், 1999 முதல் 2014 வரை அமைச்சராக இருந்தார். பின்னர் மகா விகாஸ் அகாடி ஆட்சியிலும் அமைச்சராக பணியாற்றினார்.

### பார்லி., குளிர்கால கூட்டத்தொடர்:
# அனைத்து கட்சிகளிடம் மத்திய அரசு கோரிக்கை

**புதுடெல்லி, நவ. 25-**

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகும் நிலையில், கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது அனைத்துக்கட்சி கூட்டத்தில் மத்திய அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இந்த குளிர்கால கூட்டத்தொடர் வரும் டிசம்பர் 20ம் தேதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரையொட்டி, நேற்று அனைத்து கட்சி கூட்டம் நடைபெறுகிறது. முன்னதாக அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்திருந்தது.

இதன்படி நேற்று காலை 11 மணிக்கு அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. அதில் பாராளுமன்ற கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவது குறித்து மத்திய அரசு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டதாக தெரிகிறது. "ஒரே நாடு ஒரே தேர்தல்" மற்றும் வக்பு சட்ட திருத்தம் உள்ளிட்ட முக்கிய மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு முனைப்பு காட்டி வரும்நிலையில், அதானி மீதான அமெரிக்கா அதிகாரிகளின் லஞ்ச புகார் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரச்னைகளை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் குறித்து பாராளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜூ தனது எக்ஸ் வலைதளத்தில், "மத்திய அரசின் பரிந்துரையின் பேரில் இன்று ( நவ., 25-ம் தேதி) முதல் டிசம்பர் 20-ம் தேதி வரை குளிர்கால கூட்டத்தொடரை இரு அவைகளிலும் நடத்த ஜனாதிபதி ஒப்புதல் வழங்கி உள்ளார். மேலும் நாளை ( நவ.26-ம் தேதி) பாராளுமன்ற மையம் மண்டபத்தில் அரசியல் சாசனத்தின் 75-ம் ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்படும்" என்று அதில் பதிவிட்டிருந்தார்.

# ஏ.ஆர்.ரகுமானை பிரிந்தது குறித்து மனைவி சாய்ரா பானு விளக்கம்

**மும்பை, நவ. 25-**

கடந்த இரண்டு மாதங்களாக எனக்கு உடல்நிலை சரியில்லை. அதனால்தான் நான் ஏ.ஆர்.ரகுமானிடம் இருந்து விலகி இருக்க விரும்பினேன் என்று அவரது மனைவி சாய்ரா பானு விளக்கம் அளித்துள்ளார்.

ஆஸ்கார் விருது பெற்ற இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான், கடந்த 1995-ம் ஆண்டு சாய்ரா பானுவை திருமணம் செய்து கொண்டார். இந்த தம்பதிக்கு 2 மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர். மூத்த மகள் கதீஜாவுக்கு 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடைபெற்றது. ஏ.ஆர்.ரகுமானின் மகன் அமீனும் தனது தந்தையை போல் இசைத்துறையில் கவனம் செலுத்தி வருகிறார்.

இந்த நிலையில், ஏ.ஆர்.ரகுமான் - சாய்ரா தம்பதியினர் 29 ஆண்டு கால திருமண வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், விவாகரத்து செய்ய முடிவு செய்துள்ளதாக சமீபத்தில் அறிவித்தனர். இந்த அறிவிப்பு ரகுமானின் ரசிகர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த விவகாரம் வலைதளங்களில் பேசுபொருளானது.

இதனிடையே, இவர்களது பிரிவு குறித்து வலைதளங்களில் அவதூறு பரப்பும் வகையில் வீடியோக்கள் பரப்பப்பட்டுள்ளதாகவும், அவற்றை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் கூறி ஏ.ஆர்.ரகுமான் சார்பில் அவரது வழக்கறிஞர் நர்மதா சம்பத், சம்பந்தப்பட்ட வலைதளங்களுக்கும், யூடியூபர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

இந்த நிலையில், ஏ.ஆர்.ரகுமானை பிரிந்தது ஏன்? என்பது குறித்து சாய்ரா பானு முதல் முறையாக விளக்களித்துள்ளார். இது தொடர்பாக சாய்ரா பானு பேசிய குரல் பதிவு ஒன்று வெளியாகியுள்ளது. அதில் அவர் கூறியிருப்பதாவது,

நான் சாய்ரா ரகுமான் பேசுகிறேன். நான் தற்போது மும்பையில் இருக்கிறேன். கடந்த இரண்டு மாதங்களாக எனக்கு உடல்நிலை சரியில்லை. அதனால்தான் நான் ஏ.ஆர்.ரகுமானிடம் இருந்து விலகி இருக்க விரும்பினேன். ஆனால் யூடியூப் பயனாளர்கள், தமிழ் ஊடகத்தினர் தயவுசெய்து அவருக்கு எதிராக தவறாக எதுவும் சொல்ல வேண்டாம்.


அவர் அருமையான நபர், உலகின் தலைசிறந்த மனிதர். எனது உடல்நல பிரச்சினை காரணமாக நான் சென்னையை விட்டு வெளியேற வேண்டியிருந்தது. தற்போது மும்பையில் சிகிச்சை பெற்று வருகிறேன். சென்னையில் ஏ.ஆர்.ரகுமானின் பிசியான வேலைகளுக்கு நடுவே இது சாத்தியமாகி இருக்காது.

நான் அவரையோ, எனது குழந்தைகளையோ தொந்தரவு செய்ய விரும்பவில்லை. ஏ.ஆர்.ரகுமான் ஒரு அற்புதமான மனிதர். அவர் எப்படி இருக்கிறாரோ அப்படியே அவரை இருக்க விடுங்கள் என்று நான் வேண்டிக்கொள்கிறேன். அவருக்கு எதிலும் தொடர்பு இல்லை, நான் என் உயிருக்கும் மேலாக அவரை நம்புகிறேன். அந்த அளவிற்கு நான் அவரை நேசிக்கிறேன். அவரும் அவ்வாறே நேசிக்கிறார்.

எனவே அவர் மீதான அனைத்து பொய்யான குற்றச்சாட்டுகளையும் நிறுத்துமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். கடவுள் ஆசீர்வதிக்கட்டும். இந்த நேரத்தில் எங்கள் தனிமைக்கு இடம் கொடுக்கப்பட வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். இதுவரை எதுவும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

நான் விரைவில் சென்னைக்கு வருவேன். ஆனால் நான் என் சிகிச்சையை நிறைவு செய்ய வேண்டும். எனவே, ஏ.ஆர்.ரகுமானின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் கீழ்தரமான செயலை தயவு செய்து நிறுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், நான் சொன்னது போல், அவர் ஒரு மிகச்சிறந்த நபர். இவ்வாறு சாய்ரா பானு தெரிவித்துள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



மராட்டிய சட்டசபை தேர்தல் முடிவு முற்றிலும் எதிர்பாராதது மற்றும் புரிந்துகொள்ள முடியாதது. இதற்கு பின்னால் ஏதோ மர்மம் உள்ளது. இதனை ஏற்றுக்கொள்வது கடினம். தொடர்ந்து போராடுவேன்.

- உத்தவ் தாக்கரே



தமிழர்களின் திருநாளான பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட ஏதுவாக, தேர்வர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று 2025 ஆம் ஆண்டு ஜனவரி 14 மற்றும் 16 ஆகிய தேதிகளில் நடைபெறும் இரு தேர்வுகளையும் வேறு ஒரு தேதிக்கு மத்திய அரசு மாற்றியமைக்க வேண்டும்.

- டி.டி.வி.தினகரன்



பெரியார் பல்கலை ஆசிரியர் சங்க செயலாளரை சட்டவிரோதமாக பணி நீக்க விவகாரத்தில் பல்கலைக்கழக வேந்தராகிய கவர்னர் உடனடியாக தலையிட்டு, துணைவேந்தர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள உதவிப் பேராசிரியர் பிரேம்குமார் மீதான அனைத்து நடவடிக்கைகளையும் ரத்து செய்து அவரை மீண்டும் பணியில் சேர்க்க வேண்டும்.

- அன்புமணி



அதானி விவகாரத்தில் மத்திய அரசும், பாஜகவும் விளக்கம் கொடுத்துவிட்டார்கள். தமிழ்நாடு போன்ற இந்தியா கூட்டணி கட்சிகள் ஆளும் அரசுகள்தான் பதில் சொல்ல வேண்டும். பிரதமர் மோடியை பொறுத்தவரை, ஊழல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

- தமிழிசை

## அருப்புக்கோட்டை ஒன்றிய பகுதிகளில்
# புதிய வளர்ச்சி பணிகளை வருவாய் துறை அமைச்சர் துவக்கி வைத்தார்



விருதுநகர், நவ. 25-

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட சேது ராஜபுரம் ஊராட்சியில் ரூ 11 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கலையரங்க கட்டிடத்தையும், ரூ 33 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி பள்ளி கட்டிடத்தையும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து பந்தல்குடி ஊராட்சியில் ரூ 8 லட்சம் மதிப்பில் புதிதாக சுகாதார வளாகம் கட்டுவதற்கும் அமைச்சர் அடிக்கல் நாட்டினார். மேலும் வேலாயுதபுரம் மற்றும் பெரியதும் மகுண்டு ஊராட்சியில் தலரூபாய் 27 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சுமார் 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளையும் அமைச்சர் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பேசுகையில், .

முதலமைச்சர் மு க ஸ்டாலின் நகரங்களில் இருக்கக்கூடிய அனைத்து வசதிகளும் கிராமங்களில் இருக்க வேண்டும் என நினைக்கிறார். நல்ல மனிதர்கள் வாழ்வது கிராமங்களில் தான். அதனால் கிராமங்களுக்கு அதிக வசதிகள் செய்து தருகிறோம். முதல்வர் மு க ஸ்டாலினுக்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என பேசினார்.

நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் காஜா மைதீன் நவாஸ், திமுக ஒன்றிய செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ், பந்தல்குடி பஞ்சாயத்து தலைவர் பாலாஜி பக்திநாத், பொதுக்குழு உறுப்பினர் கோப்பையராஜ். ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், மாவட்ட கவுன்சிலர் பாலச்சந்தர், மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள் ஒன்றிய கவுன்சிலர்கள், திமுக ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஹனிஷ்சாப்ரா தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஆய்வு கூட்டம் நேற்று நடைபெற்றது. அருகில் கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், கூடுதல் ஆட்சியர் மோனிகா ராணா, மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல், உதவி ஆட்சியர்(பயிற்சி)வைஷ்ணவி பால் ஆகியோர் உள்ளனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்: தொகுதி பொறுப்பாளர் பரணிமணி நேரில் ஆய்வு



ஒட்டன்சத்திரம், நவ. 25-

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆலோசனைப்படி ஒட்டன் சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜோதீஸ்வரன் தலைமையில்,ஒட்டன்சத்திரம் தொகுதி பொறுப்பாளரும், மாநில நெசவாளர் அணி செயலாளர் பரணிமணி, மார்க்கம்பட்டி, எல்லப்பட்டி, சின்னக்காம்பட்டி, குத்திலிப்பை, ஐ வாடிப்பட்டி, கே.கீரனூர், மண்டவாடி ஊராட்சிகளில் நடைபெற்ற வாக்காளர் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு பூத் வாரியாக நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு, நீக்கல், திருத்தல் உள்ளிட்ட பணிகளை பார் வையிட்டு வாக்கு சாவடி முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார்.

இந்நிகழ்வில் ஒன்றிய பொருளாளர் அழகியணன், ஒன்றிய சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் நிஜாமுதீன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆரிப் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் பிரபு உள்ளிட்ட கிளை செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முதுகுளத்தூர்: ஒரே நாடு ஒரே தேர்தல் அறிவிப்புக்கு எதிரான பிரச்சார இயக்கம்



முதுகுளத்தூர், நவ. 25-

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற ஒன்றிய அரசின் அறிவிப்பை எதிர்த்து மக்கள் சந்திப்பு பிரச்சார இயக்கம் தாலுகா குழு செயலாளர் கே.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

முதுகுளத்தூர் தொகுதி மக்களின் கோரிக்கையான விவசாயத்திற்கு வைகை தண்ணீரின் உரிய பங்கிலை வழங்கக் கோரியும், 100 நாள் வேலையில் பதிவு செய்யப்பட்ட அனைவருக்கும் முழு சம்பளம் வழங்கிட கோரியும், முதுகுளத்தூரில் பயிர் இன்சூரன்ஸ் 2023-2024 யில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க கோரியும் பிரசாரம் 25 மேற்பட்ட கிராமங்களில் மக்கள் சந்திப்பு இயக்கம் நடைபெற்றது. மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி.மயில்வாகனன், மாவட்ட குழு உறுப்பினர் வி.முருகன், தாலுகா குழு உறுப்பினர்கள் என்.சண்முகையா, செ.முனியசாமி, ஆர்.ரஜினிகாந்த், எம்.வைஷ்ணவி, போக்குவரத்து நிர்வாகி திருமலை கிளை செயலாளர் நாத துரை, வீர செம் பொன், பழனிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## பெரியாறு பாசன பகுதியை வேளாண் மண்டலமாக அறிவிக்க கோரி
# மேலூரில் விவசாய சங்கத்தினர் வரும் 29-ம் தேதி கடையடைப்பு போராட்டம்

மேலூர், நவ. 25-

மேலூரில் முல்லைப்பெரியாறு ஒரு போக பாசன விவசாயிகள் சங்கம் மற்றும் மேலூர் நகர் அனைத்து வர்த்தக சங்கங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர்கள், மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டம் நேற்று மூவேந்தர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் அரிட்டாபட்டி பகுதியில் வேதாந்த நிறுவனத்தின் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்கும் பணியை மத்திய அரசாங்கம் தடை செய்ய வேண்டும். முல்லைப் பெரியாறு பாசனப்பகுதி முழுவதையும் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசு கெஜட்டில் வெளியிட வேண்டும் என வலியுறுத்தி வரும் 29ந் தேதி வெள்ளிக்கிழமை மேலூர் பகுதி முழுவதும் கடையடைப்பு நடத்தி கண்டன ஆர்ப்பாட்டம் பஸ் நிலையம் முன்பு காலை 10 மணிக்கு நடத்துவது என்றும் கூட்டத்தில் பேசி முடிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் அனைத்துப் பகுதி பொதுமக்களும் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினர். முல்லைப் பெரியாறு ஒரு போக விவசாயிகள் சங்கம் மற்றும் அனைத்து வர்த்தக சங்கங்கள், சுற்றுச்சூழல் சமூக ஆர்வலர்கள் இதில் கலந்து கொண்டனர்.

# ராமநாதபுரத்தில் ஐஸ் போதை பொருளுடன் 2 வாலிபர்கள் கைது

ராமநாதபுரம், நவ. 25-

ராமநாதபுரத்தில் விலை உயர்ந்த ஐஸ் போதைப்பொருளுடன் 2 வாலிபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராமநாதபுரத்தில் விலை உயர்ந்த போதைப் பொருளான ஐஸ் மெத்த பெட்டமைன் வைத்திருந்ததாக கடந்த மாதம் 24-ந் தேதி சுமார் 300 கிராம் எடையுள்ள மெத்தபெட்டமைன் போதை பொருளுடன் தேவிபட்டினம் சின்ன பள்ளி வாசல் தெருவை சேர்ந்த மைதீன் கனி என்பவரின் மகன் முகமது ஹாரிஸ் (வயது 29), ராமநாதபுரம் நேரு நகர் முதலாவது தெருவை சேர்ந்த சந்திரன் மகன் ஜெகதீஷ் (29) ஆகியோரை போலீசார் கைது செய்தனர். இவர்களிடம் நடத்திய விசாரணையின் அடிப்படையில் ராமநாதபுரம் கேணிக்கரை போலீசார் தீவிரமாக கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ராமநாதபுரம் சக்கரக்கோட்டை அப்துல் கலாம் நகர் டாஸ்மாக் கடையின் பின்புறத்தில் 2 வாலிபர்களை மடக்கி பிடித்து சோதனையிட்டனர். அவர்களிடம் சுமார் 13 கிராம் ஐஸ் மெத்தபெட்டமைன் போதை பொருள் இருந்ததை கைப்பற்றி இருவரிடமிருந்து ரூ.20 ஆயிரம் ரொக்கம், 2 ஆண்ட்ராய்டு செல்போன்கள், ஒரு ஐபோன், 2 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்தனர்.

கைப்பற்றப்பட்ட ஐஸ்மெத்தபெட்டமைன் போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு ரூ.75 லட்சம் ஆகும். இது தொடர்பாக ராமநாதபுரம் சிவஞானபுரம் ரோடு பகுதியைச் சேர்ந்த அப்துல் மஜீத் மகன் ஹமீத் முகம்மது (21), ராமநாதபுரம் காட்டூரணி தங்கப்பாபுரம் முகமது மரைக்காயர் மகன் ஹபிப் முஹம்மது (22) ஆகிய இருவரையும் கைது செய்தனர். இவர்களிடம் போலீசார் தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சர்வதேச மோசடி விழிப்புணர்வு வாரம் 2024: பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் எச்ஆர், ஐஎல்எம் மற்றும் நிர்வாகத் தலைவர் விக்ரம்ஜீத் சிங்

சென்னை, நவ 25-

நாம் சர்வதேச மோசடி விழிப்புணர்வு வாரம் 2024-யில் நுழையும் தருவாயில், காப்பீட்டு மோசடியின் முக்கியமான பிரச்சினை மற்றும் அதை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான கூட்டு முயற்சிகளைப் பற்றி சிந்திக்க இது ஒரு சிறந்த தருணம். இது குறித்து பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் எச்ஆர், ஐஎல்எம் மற்றும் நிர்வாகத் தலைவர் விக்ரம்ஜீத் சிங் கூறுகையில், பொது காப்பீட்டுத் துறையானது உள்கட்டமைப்பு, வாகனம், சுகாதாரம், விவசாயம் மற்றும் ஓட்டுமொத்த சமூகம் போன்ற பெரும்பாலான தொழிற்சாலைகளுடன் சிக்கலான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு அத்தியாவசிய நிதிப் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் இது முக்கியமானது. காப்பீட்டின் நன்மைகள் அதிகம் இருந்தாலும் அதை வாங்க மக்கள் ஏன் தயங்குகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது முக்கியமானது. தொழிற்துறையானது 100% க்கும் அதிகமான ஒருங்கிணைந்த விகிதத்தைக் கொண்டுள்ளது. அதாவது முழு காப்பீட்டு துறையும் அவர்களின் பிரீமியம் தொகையில் பெறும் பணத்தைக் காட்டிலும், கோரல்களில் அதிகப் பணத்தைச் செலுத்துகிறார்கள்.

இருப்பினும், காப்பீட்டை வாங்கினால், தங்களின் கிளைம் செட்டில்மென்ட் கிடைக்குமோ கிடைக்காதோ என்று மக்கள் கவலைப்படுகிறார்கள். தகவலறிந்து எச்சரிக்கையாக இருப்பதன் மூலம், வாடிக்கையாளர்கள் மோசடியிலிருந்து தங்களை பாதுகாக்கலாம். தொழிற்துறையின் முயற்சிகளுடன், நாம் மிகவும் பாதுகாப்பான மற்றும் நம்பகமான காப்பீட்டு சூழலை உருவாக்க முடியும்.

பஜாஜ் அலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் மோசடியை எதிர்த்துப் போராடுவதற்கும் உண்மையான வாடிக்கையாளர்கள் அவர்களுக்குத் தகுதியான பாதுகாப்பு மற்றும் நன்மைகளைப் பெறுவதை உறுதி செய்வதற்கும் உறுதிபூண்டுள்ளது. பங்குதாரர்களுடன் தொடர்ச்சியான கண்டுபிடிப்பு மற்றும் ஒத்துழைப்பு மூலம் ஒரு வலுவான மற்றும் வெளிப்படையான காப்பீட்டு சூழலை உருவாக்க நாங்கள் முயற்சி செய்கிறோம் என்று கூறினார்.

# சென்னையில் பியிங் ஹூமன் ஆடையகம் நடன இயக்குனர் பிரபு தேவா திறந்து வைத்தார்

சென்னை, நவ 25-

புகழ்பெற்ற ஸ்டைல் மற்றும் சமூகப் பார்வையுடனான பியிங் ஹூமன் ஆடையகம், இன்று சென்னை எக்ஸ்பிரஸ் அவென்யூ மாலில் தனது புதிய கடையினை மாபெரும் விழாவுடன் தொடங்கியது. இந்த நிகழ்ச்சிக்கு நடன மன்னர் பிரபு தேவா தலைமை தாங்கி, பலரின் உற்சாக கூட்டத்தின் மத்தியில் ஷோரூமை திறந்து வைத்தார். புதிய கடை, சமகால கலவையை வெளிப்படுத்தும் ஆடம்பர கால துவக்கம் (ஏ-டிஎஸ்டி 24) கலைகளுடன் திறக்கப்பட்டுள்ளது, மேலும் சமுதாயத்திற்கு திருப்பித் தரும் எண்ணத்துடன் கூடிய தத்துவத்தை ஒட்டிய ஒரு புதிய ஃபேஷன் அனுபவத்தை வழங்குகிறது. இது குறித்து பியிங் ஹூமன் ஆடையகம்- இன் சிஇஓ விவேக் சாந்த் வர் கூறுகையில்,

சென்னை நகரத்திற்கு பியிங் ஹூமன் ஆடையகம் வருகை தருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கலாச்சாரம் மற்றும் ஃபேஷன் மீது தனிச்சிறப்பான அன்பை கொண்ட இந்த நகருக்கு நமது &#39 நோக்கம் கொண்ட ஃபேஷன்&#39 எண்ணத்தை கொண்டு வருவது பெருமையாக உள்ளது. இந்த முக்கிய தருணத்தில் பிரபு தேவா கலந்து கொள்ளுவதால் எங்களுக்கு பெருமை. சென்னை சமூகத்திற்கான நம்பகமான ஃபேஷன் பரிமாற்றத்தை வழங்க நாங்கள் ஆவலுடன் இருக்கிறோம் என்று கூறினார்.

# ராஜபாளையத்தில் மத்திய நிதியமைச்சரை கண்டித்து விஸ்வகர்மா சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



ராஜபாளையம், நவ. 25-

ராஜபாளையத்தில் விஸ்வகர்மா சங்கத்தினர் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அனைத்திந்திய உழைக்கும் படைப்பாளி வாழ்வுரிமைக் கட்சி தலைவர் மாநில பொதுச்செயலாளர் எம்.ஜம்புகேஸ்வரன் தலைமை தாங்கி பேசுகையில்.

மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் கருவிகள் வைத்து தொழில் செய்பவர்கள் அனைவருமே விஸ்வகர்ம பிரிவை சேர்ந்தவர்கள் தான் என்று பேசி நமது ஐந்துணை விஸ்வகர்ம சமுதாயத்தை இழிவு படுத்தியது ஏற்கத்தக்கது அல்ல ஆகவே விஸ்வகர்ம கம்மாளர்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்,என்றார். மத்திய அரசு விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் பயன் பெறும் பயனாளிகளுக்கு விஸ்வகர்மா என்ற சான்றிதழ் வழங்கு வதை நிறுத்த வேண்டும்.

மத்திய மாநில அரசுகள் விஸ்வகர்மா கம்மாள சமுதாயத்தினருக்கு 5% இட ஒதுக்கீடு சட்டம் இயற்றிட வேண்டும் மாநில அரசு ஆலயங்களில் நியமிக்கும் அறங்காவலர் குழுவில் விஸ்வகர்மா சமுதாயத்தினர் ஒருவரை நியமித்திட சட்டம் இயற்றிட வேண்டும் தச்சர் கொல்லர் பொற்கொல்லர் கண்ணார் சிற்பி கலை திறன் வளர்க்கும் விதத்தில் விஸ்வகர்மா ஐந் தொழிலாளர் நல வாரியம் மத்திய மாநில அரசுகள் அமைத்துதல் வேண்டும் என கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாநில எம் கே டி பேரவை கௌரவ ஆலோசகர் ஜயப்பன் ஆசாரி மாடமூர்த்தி விருதுநகர் மாவட்ட செயலாளர் ராஜகோபால் மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் எம் கே டி பேரவை மாநில செயலாளர் மணிகண்டன் மற்றும் நகர செயலாளர் பேச்சிமுத்து கணேசன் சுரேஷ்குமார் ஒன்றிய செயலாளர் மற்றும் ஏராளமான நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# திருமங்கலம் பகுதி நான்கு வழிச்சாலையில் நிலவும் கடுமையான பனிமூட்டத்தால் வாகன ஓட்டிகள் திணறல்

திருமங்கலம், நவ. 25-

திருமங்கலம் பகுதி நான்குவழிச்சாலையில் நிலவிடும் கடுமையான பனிமூட்டம் காரணமாக வாகனஓட்டிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தில் பனிக்காலமான மார்கழி மாதம் விரைவில் துவங்கவுள்ள நிலையில் தற்போது பனிமூட்டம் அதிகமாக காணப்படுகிறது.குறிப்பாக திருமங்கலம் நகர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமப்பகுதிகளில் அதிகாலை வேளைகளில் வட மாநிலங்களைப் போன்று அதிகளவில் பனி கொட்டுகிறது.இந்நிலையில் திருமங்கலம் பகுதி வழியே செல்லும் நான்கு வழிச்சாலையில் கடந்த சிலநாட்களாக மூடு பனி என்றழைக்கப்படும் கடுமையான பனிமூட்டம் காணப்படுகிறது.அதிகாலை தொடங்கி சூரியன் உதித்து சிலமணி நேரங்கள் வரையில் என இந்த பனிமூட்டம் காணப்படுவதால் எதிரே யுள்ள சாலை சரிவர தெரியாததால் விடிந்த பின்னரும் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடியே செல்கின்றன.

கப்பலூர் டோல்கேட் தொடங்கி திருமங்கலம் நகர், மேலக்கோட்டை, சிவரக்கோட்டை, கள்ளிக்குடி வழியாக மின்னல் வேகத்தில் பறந்திடும் வாகனங்கள் தற்போது வழக்கத்திற்கு மாறாக காணப்படும் பனிமூட்டத்தினால் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி மிதமான வேகத்தில் செல்கின்றன. இந்த பனிமூட்டம் குறித்து சாத்தூர் பகுதியைச் சேர்ந்த சரக்கு லாரி டிரைவர் செந்தில்(50)கூறுகையில், இந்த பனிமூட்டத்தால் எதிரேயுள்ள சாலை சரிவர தெரிவதில்லை,லாரியின் பக்க வாட்டு பகுதி திறந்து இருப்பதால் கை,கால்கள் குளிரால் விறைத்துக் கொள்வதால் வாகனத்தை சரியாக ஓட்டமுடியாமல் அவதிப்பட வேண்டி இருக்கிறது என்றார்.

இந்த பனிமூட்டம் வரும் நாட்களில் மென்மேலும் அதிகரித்து நான்கு வழிச்சாலையில் தள்ளிரவு மற்றும் அதிகாலை நேர வாகன போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பரமக்குடியில் த.மு.மு.க. சார்பில் நடந்த இலவச மருத்துவ முகாம்



பரமக்குடி, நவ. 25-

தமுமுக இராமநாதபுரம் மேற்கு மாவட்டம் பரமக்குடி மருத்துவ சேவை அணி மற்றும் ஏ.ஜெ. இயற்கை மருந்தகம் இணைந்து பரமக்குடி, பாலன் நகரில் இலவச மருத்துவ முகாம் நடந்தது. மாவட்ட தலைவர் சேக் அப்துல்லா தலைமை தாங்கினார்.கிராஅத் அஜினா அலிமா வரவேற்றார்.

தமுமுக மாவட்ட செயலாளர் சிந்தா சேக் மதார் முகாமை துவக்கி வைத்தார். மமக மாவட்ட செயலாளர் முகம்மது இலியாஸ்,மஸ்ஜித் தக்ஃவா பள்ளிவாசல் இமாம் தாஹிர் சைபுதீன், வட்டார ஜமாஅத் செயலாளர் தாஜ்தீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.மாவட்ட பொருளாளர் செய்யது அப்தாஹிர், நகர் செயலாளர் நல்ல இப்ராஹிம், நகர் மமக செயலாளர் சர்க்கரைக் கனி மற்றும் மாவட்ட, நகர, வார்டு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பாலன் நகர் வட்டார ஜமாஅத் தலைவர் அப்துல் கபூர், இஸ்லாமிய பிரச்சார பேரவை மாவட்ட செயலாளர் சாதிக் பாட்சா ஆகியோர் பெண்களுக்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்தனர்.முகாம் ஒருங்கிணைப்பு மாவட்ட செயலாளர் முகம்மது இஸ்மாயில், நகர் செயலாளர் ஹாலித் முகம்மது செய்திருந்தனர். நகர் தலைவர் முகம்மது சஜித் நன்றியுரையாற்றினார். நகர் பொருளாளர் அப்துல்லா முகாம் ஏற்பாடுகளை செய்திருந்தார். பெண்கள் உள்பட சுமார் நூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# கணவாய்ப்பட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டம்

வத்தலக்குண்டு, நவ. 25-

வத்தலக்குண்டு அருகே உள்ள கணவாய்ப்பட்டி ஊராட்சியில் உள்ளாட்சிகள் தினத்தையொட்டி கிராம சபை கூட்டம் கன்னிமார்கோவில் முன்பு ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ் தலைமையில் நடந்தது.



கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் ரமேஷ் கூறுகையில், அடித்தட்டு மக்களின் அதிகார மையம் என கருதப்படும்இந்தகிராமசபை கூட்டத்தில் ஊராட்சி மன்ற நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையும், பொறுப்புணர்வை ஊக்குவித்தல், வளர்ச்சி திட்டங்களை திட்மிடுதல் மற்றும் செயல்படுத்துதல் பயனாளிகளின் விருப்பத்தின் படிபொதுமக்களின் பங்களிப்பை மேம்படுத்துதல் மற்றும் சமூக தணிக்கைக்கு வழி வகுத்திடல் கிராம சபை கூட்டத்தின் நோக்கமாகும். கடந்த 5ஆண்டு காலத்தில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி ஊராட்சி வளர்ச்சிக்காக வழங்கிய உதவியை பயன்படுத்தி இந்த ஊராட்சியில் பல்வேறு திட்டப் பணிகளை செயல்படுத்தி உள்ளோம். கலைஞர் கனவு இல்லத்தில் 28 பயனாளிகளுக்கு வீடுகட்டுவதற்கு இலவசமாகவழங்கியபணிநடைபெற்று வருகிறது என கூறினார்.

மேலும் அதிக அளவில் கிராம சபை கூட்டத்திற்கு ஆர்வமுடன் வந்த பெண்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஊராட்சியின்அடையாளமாகமரக்கன்று நடப்பட்டது. இக்கூட்டத்தில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் விஜயராணி ஊராட்சி செயலர் முத்துக்குமார் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



மறைந்த அ.தி.மு.க. நிறுவனர் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகிஅம்மாளின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றம் சார்பில் அதன் செயலாளர் எஸ்.டி.ஜெயபாலன் கீரைத்துறையில் உள்ள முதியோர் இல்லத்தில் அன்னதானம் வழங்கினார்.

## மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருச்சி கிளையில்
# புதிய தங்க நகை கலெக்ஷன் அறிமுகம்




**திருச்சி, நவ 25-**

திருச்சி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ஷோரூமில் ஸ்வர்ணகீர்த்தி என்ற புதிய தங்க நகை கலெக்ஷன் அறிமுகம். இந்த புதிய கலெக்சனை சம்பத் குடும்பத்தினர், லக்ஷ்மணன் குடும்பத்தினர் ஆகியோர் அறிமுகப்படுத்தினர், இந்நிகழ்ச்சியில் ஜோசப் பியூஸ் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருச்சி கிளை தலைவர்), ஷேக் தாவூத் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருச்சி கிளை துணை தலைவர்), திவாகர் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் திருச்சி கிளை வர்த்தக மேலாளர்), மற்றும் கிளை ஊழியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் தற்போது 13 நாடுகளில் 360-க்கும் மேற்பட்ட சில்லறை விற்பனை நிலையங்களுடன் உலகில் மிகப்பெரிய நகை விற்பனை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோயில், சேலம், திருச்சி, ஈரோடு, வேலூர், இராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, தஞ்சாவூர், கும்பகோணம், திருப்பூர், காரைக்குடி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, மார்த்தாண்டம், புதுச்சேரி, கரூர் ஆகிய நகரங்களில் 29 கிளைகளை கொண்டுள்ளது.

மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் விற்பனையகத்தில் கலைநயமிக்க அணிகலன்கள் கிடைப்பது சிறப்பம்சமாகும். அணிந்தாலே ஜொலிக்கும் வைர நகைகளான மைன் பிரம்மாண்டமான வடிவமைப்புகளை கொண்டுள்ள வெட்டாத வைரத்தால் செய்யப்பட்ட எரா மிகவும் பொக்கிஷமாக கருதப்படும் விலை உயர்ந்த கற்களால் செய்யப்பட்ட நகை தொகுப்பான பிரீசியா நகைகள், கைவினை கலைஞர்களால் கையால் செய்யப்பட்ட நகைகளின் தொகுப்பான 'எத்தினிக்' நமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் பாரம்பரிய இந்திய நகை வடிமைப்புகளில் உருவான டிவைன் குழந்தைகளுக்கான நகை தொகுப்பான ஸ்டார்லெட் ஆகியவை இந்தகண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. இதைத்தவிர அழகிய நகைகளை சிறப்பு சலுகையில் வாங்கவும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

# நத்தம் அருகே சிறுவனை கடத்தி சென்றவர் கைது

**நத்தம், நவ. 25-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே செந்துறை-பழனிபட்டியை சேர்ந்தவர் கலையரசன்(26). இவரது மகன் ஹரிஹரன் (6). பழனிபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 2-ம் வகுப்பு படித்து வருகிறார். தினமும் ஆட்டோவில் பள்ளிக்கு சென்று வந்துள்ளார்.இவரை அடைக்கனூரை சேர்ந்த மனோகர் (19) என்பவர் கடந்த சில நாட்களாகவே சிறுவன் ஹரிஹரனை பின் தொடர்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பள்ளி முடிந்து வீட்டிற்கு சென்ற சிறுவனை மனோகர் மிரட்டி தனது பைக்கில் கடத்தி சென்று சிரங்காட்டுபட்டிக்கு செல்லும் மலைப்பாதையில் மறைத்து வைத்துள்ளார். அப்போது சிறுவன் அழுது கதறியுள்ளான்.இதை அந்த வழியாக சென்ற ஆடு மேய்ப்பவர்கள் பார்த்து சிறுவனிடம் செல்லவே இதை பார்த்த மனோகர் தப்பியோடி விட்டான்.இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசில் கலையரசன் புகார் செய்தார்.அதன் பேரில் நத்தம் போலீஸ் இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி, சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் உள்ளிட்ட போலீசார்கள் வழக்கு பதிவு செய்து அடைக்கனூர் பகுதியில் பதுங்கி இருந்த மனோகரை கைது செய்தனர்.மேலும் சிறுவனை எதற்காக கடத்தினார்? என்பது குறித்தும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சவீதா செவிலியர் கல்லூரி, ஏ.என்.இ.ஐ. இணைந்து நடத்திய மாநில மாநாடு

**சென்னை, நவ. 25-**

நோயாளிகளுக்கு சிறப்பான சேவையாற்றி வரும் செவிலியர்களுக்கு அவர்களின் துறையில் புதுமைமிக்க மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் மருத்துவ நர்சிங்கில் புதுமை - எதிர்காலத்திற்கான சாலை வரைபடம் என்னும் மாநில அளவிலான மாநாடு சவீதா செவிலியர் கல்லூரி மற்றும் இந்திய செவிலியர் சங்கத்தின் தமிழ்நாடு பிரிவு என்னும் ஏஎன்இஐ சார்பில் சென்னை சிமாட்ஸ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. மருத்துவ நர்சிங் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்க இந்த மாநாட்டில் தொலைநோக்கு சிந்தனைமிக்க தலைவர்கள், மருத்துவ நிபுணர்கள் மற்றும் 210க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டிற்கு சிமாட்ஸ் பல்கலைக்கழக வேந்தர் என்.எம்.வீரய்யன் தலைமை வகித்தார். தலைமை விருந்தினரான டாக்டர் லல்லு ஜோசப் மாநாட்டை துவக்கி வைத்து, செவிலியர் பயிற்சியில் புதுமையின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார். டாக்டர் ஜோதி கிளாரா மைக்கேல் பேசுகையில், டெலிஹெல்த், செயற்கை நுண்ணறிவு மற்றும் மின்னணு சுகாதார பதிவுகள் உள்ளிட்ட மாறிவரும் தொழில்நுட்பங்கள் குறித்தும் பேசினார். துணைவேந்தர் டாக்டர். அஷ்வனி குமார் பேசுகையில், நர்சிங் துறையில் புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்குமாறு பங்கேற்பாளர்களை கேட்டுக் கொண்டார். இந்த மாநாட்டில் காப்புரிமை பெற்ற 15 நர்சிங் விளக்கக் காட்சிகள் இடம்பெற்றன, இதில் முதல் 3 இடம் பிடித்தவைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன, மேலும் இந்த மாநாட்டில் டாக்டர் மேத்தா மருத்துவமனைகளின் தலைவர் சமீர் மேத்தா அனைவருக்கும் ஊக்கமளிக்கும் வகையில் நிறை உரை ஆற்றினார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

# நாகமநாயக்கன்பட்டியில் சிறப்பு என்.எஸ்.எஸ் முகாம்



**திருமங்கலம், நவ. 25-**

மதுரை மாவட்டம் அத்திபட்டி இராமையா நாடார் மேல்நிலைப் பள்ளியின் நாட்டு நலப் பணித்திட்டம் சார்பாக டிஜிட்டல் கல்வி அறிவில் இளைஞர்களின் பங்கு எனும் கருப்பொருளில் சிறப்பு முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.எழுமலை அருகேயுள்ள நாகமநாயக்கன்பட்டி கிராமத்தில் நடைபெற்று வரும் இந்த முகாமின் 5ம் நாளான நேற்று போதைப்பொருள் ஒழிப்பு, போக்சோ விழிப்புணர்வு, பாலியல் குற்றத்தடுப்பு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு,உணவு பாகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் திட்ட அலுவலர் அ. இருளப்பன் அனைவரையும் வரவேற்று பேசினார். போக்சோ சட்ட விழிப்புணர்வு குறித்து முன்னாள் மாவட்ட நீதிபதி ஆர்.சடையாண்டி பேசினார். தமிழ்நாடு குடிமக்கள் நுகர்வோர் பாதுகாப்பு மையத்தின் மாநில தலைவர் ஆர்.கர்ணன் நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பு சட்டம் குறித்து சிறப்புரையாற்றினார். இதனை தொடர்ந்து அனைவருக்கும் மஞ்சள் பை வழங்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்து கொண்டனர். எழுமலை சப்- இன்ஸ்பெக்டர் செல்லசாமி போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழியை வாசித்தார். முன்னாள் அரசு கல்லூரி முதல்வர் பாண்டி குருசாமி கிராமத்தின் சார்பாக முன்னிலை வகித்து பேசினார். இம்முகாமில், எழுமலை காவல் நிலைய தலைமை காவலர்கள் ரமேஷ் கண்ணன், கணேசன், ராமர், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், கிராம பெரியவர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முடிவில் பள்ளி தலைமையாசிரியர் முத்தழகு நன்றி கூறினார்.

# போகலூர் வட்டாரத்தில் திட்ட பணிகள் வேளாண் கூடுதல் இயக்குநர் நேரில் ஆய்வு




**பரமக்குடி, நவ. 25-**

போகலூர் வட்டாரத்தில் தமிழ்நாடு சிறுதானியம் சாகுபடி இயக்கம் திட்டத்தில் 50 சதம் மானியத்தில் பொது விவசாயிகளுக்கும் 70 சதம் மானியத்தில் பட்டியலின விவசாயிகளுக்கும் செயல் விளக்க திடல் அமைக்க இராகி, குதிரைவாலி விதைகள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் அறுவடை மானியம் மொத்தம் 1 ஹெக்டேருக்கு ரூ.2100 மானியம் வழங்கப்பட்டது. வேளாண்மை கூடுதல் இயக்குநர் கண்ணையா சத்திரக்குடியில் காந்தி ரோஜா வயலில் குதிரைவாலி எம்.டி.யு- 1 ஒரு ஹெக்டேர் பரப்பளவில் செயல் விளக்கத்திடல் அமைக்கப்பட்டதை ஆய்வு செய்து பயிரினை களைத்து விட்டு நன்கு பராமரிக்க ஆலோசனை வழங்கினார். குதிரைவாலி செயல் விளக்கத் திடலினை விதைப் பண்ணையாக பதிவு செய்து சான்று விதையாக விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

மேலும் பாரம்பரிய நெல் இரகமான தூயமல்லி, கருப்பு கவுனி நெல் சாகுபடி செயல் விளக்கத்திடல், நெல் ஆடுதுறை 54 விதைப் பண்ணையினை ஆய்வு செய்தார். கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் நெல் வரப்புகளில் வரப்பு பயிராக உளுந்து சாகுபடி செய்ய 1 ஹெக்டேருக்கு 50% மானியத்தில் உளுந்து விதை 5 கிலோ வழங்கப்பட்டுள்ளது. போகலூரில் நெல் வயல் வரப்பில் வரப்பு பயிராக உளுந்து சாகுபடி செய்ததை ஆய்வு செய்தார்.இந்த ஆய்வின் பொழுது வேளாண்மை இணை இயக்குநர்(பொ) பாஸ்கரமணியன், வேளாண்மை துணை இயக்குநர் மாநில திட்டம் அமர்லால், சத்திரக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் இராஜேந்திரன், உதவி விதை அலுவலர் கண்ணன் ஆகியோர் இருந்தனர்.

# மேலூர் டெம்பிள் சிட்டி பேக்கரியில் 200 கிலோ பிளம் கேக் தயாரிப்பு



**மேலூர், நவ. 25-**

மேலூர் டெம்பிள் சிட்டி பேக்கரியில் வரும் கிறிஸ்துமஸ் பண்டிகை முன்னிட்டு 200 கிலோவிலான பிளம் கேக் தயாரிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

நாடு முழுவதும் வருகிற டிசம்பர் மாதம் 25ஆம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில் மதுரை மாவட்டம், மேலூர் நான்கு வழி சாலையில் உள்ள பிரபல தனியார் உணவகமான டெம்பிள் சிட்டி சார்பில் 200 கிலோ கொண்ட பிரம்மாண்ட பிளம் கேக் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

அத்திப்பழம், பேரிச்சம்பழம், உலர் திராட்சை, பாதாம், பிஸ்தா, முந்திரி உள்ளிட்ட 200 கிலோ அளவிலான உலர் பழங்களை ஒயின் மற்றும் உயர் ரக மதுபானங்கள் கொண்டு ஆல்கஹாலல் பதப்படுத்தி பிளம் கேக் தயாரிக்கும் பணியினை மதுரை மாவட்ட ஓட்டல் சங்க தலைவரும், உணவக உரிமையாளருமான டெம்பிள் சிட்டி குமார் தொடங்கி வைத்தார். சுமார் 20 நாட்களுக்கு மேலாக ஆல்கஹால் பதப்படுத்தப்பட உள்ள இந்த உலர் பழங்கள் கொண்டு 200 கிலோ கொண்ட பிளம்கேக் தயாரிப்பு பணியில் பத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் ஈடுபட்டனர்.

கடந்த ஆண்டு தயாரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் கேக் மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்ற நிலையில் தற்போது குழந்தைகள் பெரியவர்கள் என அனைவரையும் கவரும் வகையில் தயாரிக்கப்பட்ட பிளம் கேக் உணவகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என உணவகத்தின் உரிமையாளரும், டெம்பிள் சிட்டி பேக்கரி நிர்வாக இயக்குனர் அபிகாஷ் தெரிவித்தார். நிகழ்ச்சியில் கட்டெறும்பு யூடிப் சேனல் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அழகிய தோற்றத்தில் தனித்துவமான வடிவமைப்புடன் விவோவின் புதிய ஒய்300 ஸ்மார்ட்போன்

**சென்னை, நவ 25-**

உலக அளவில் சிறந்த ஸ்மார்ட்போன் பிராண்டாக திகழும் விவோ நிறுவனம் தனது ஒய் மாடல் வரிசையில் புதிய ஒய்300 ஸ்மார்ட்போனை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஸ்மார்ட்போன் அழகிய தோற்றத்தில் தனித்துவமான வடிவமைப்பைக் கொண்டுள்ளது. மிகவும் சக்திவாய்ந்த இந்த ஸ்மார்ட்போனில் சிறந்த புகைப்படம் எடுப்பதற்கு சோனி ஐஎம்எக்ஸ்882 பிரதான கேமரா மற்றும் ஏஐ ஆரா லைட் தொழில்நுட்பம் மற்றும் 2எக்ஸ் போர்ட்ரெய்ட் அம்சம் ஆகியவை இடம் பெற்றுள்ளது. இதன் மூலம் பயனர்கள் தாங்கள் விரும்பும் படங்களை மிகவும் துல்லியமாக எடுக்க முடியும். வேகமான மற்றும் திறமையான சார்ஜிங்கிற்காக இதில் 80 வாட்ஸ் பிளாஷ்சார்ஜ் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய ஒய்300 ஸ்மார்ட்போன் டைட்டானியம் சில்வர், எமரால்டு கிரீன் மற்றும் பாண்டம் பர்பிள் வண்ணங்களில் வெளிவருகிறது. இது 8ஜிபி ரேம் மற்றும் 128ஜிபி மெமரி கார்டுடன் வரி உட்பட 21,999 ரூபாய்க்கும், 8ஜிபி மற்றும் 256ஜிபி உடன் 23,999 ரூபாய்க்கும் கிடைக்கும். இந்த ஸ்மார்ட்போன் நவம்பர் 26 முதல் விவோ இந்தியா இ-ஸ்டோர், பிளிப்கார்ட், அமேசான் ஆகிய இணையதளங்கள் மற்றும் இந்தியா முழுவதும் உள்ள ஆப்லைன் ஸ்டோர்களிலும் கிடைக்கும். இதற்கான முன் பதிவு துவங்கி உள்ள நிலையில் வரும் 25-ந் தேதி வரை வாடிக்கையாளர்கள் முன் பதிவு செய்யலாம்.

## தமிழகத்தில் மயிலாடுதுறை, தஞ்சை உள்ளிட்ட
# டெல்டா மாவட்டங்களில் இன்று ஆரஞ்சு எச்சரிக்கை

**சென்னை, நவ. 25-**

தமிழகத்தில் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் இன்று மிக கன மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகத்தில் 30-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப்பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுவடைந்துள்ளது. மேலும் இது தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில், தமிழகத்தில் இன்று 4 மாவட்டங்களில் மிக கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நேற்று முன்தினம் பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதி மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதியானது, நேற்று (24-11-2024) காலை 05.30 மணி அளவில் தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று, காலை அதே பகுதியில் நிலவியது. இது மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து, இன்று (25-11-2024) தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும். இது மேலும் அதற்கடுத்த இரு தினங்களில் வடமேற்கு திசையில் தமிழகம்- இலங்கை கடற்கரையை நோக்கி நகரக்கூடும்.

இன்று (25-11-2024) கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், விழுப்புரம், அரியலூர், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள், புதுவையில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 30-31 டிகரி செல்சியஸை ஒட்டியும், குறைந்த பட்ச வெப்பநிலை 24 டிகரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சங்கத்தின் ஐம்பெரும் விழா



**திண்டுக்கல், நவ. 25-**

திண்டுக்கல்லில் தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்க ஐம்பெரும் விழா நடைபெற்றது.

தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பில் பதவி உயர்வு பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா, தமிழக அரசின் டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா, பணி மாறுதல் பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா, நல்லாசிரியர் மற்றும் ஆசிரியர் செம்மல் விருது பெற்ற தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா, அரசு பொது தேர்வில் சாதனை புரிந்த மாணவ மாணவிகளுக்கு பாராட்டு விழா என ஐம்பெரும்விழா திண்டுக்கல் நேருஜி நினைவு மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட தலைவர் வேளாங்கண்ணி மாவட்ட செயலாளர் ராஜா தலைமையில் நடைபெற்றது. மகளிர் அணி செயலாளர் தெய்வானை, கல்வி மாவட்ட தலைவர் சண்முகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப்பு செயலாளர் வயநமசி வரவேற்றார்.

நிகழ்ச்சியில் மாநில தலைவர் அன்பரசன், மாநில பொதுச் சயலாளர் மாரிமுத்து, மேனாள் மாநில பொதுச் செயலாளர் அருள் சுந்தரராஜன், மாநில தலைவர் சத்தியமூர்த்தி, பீட்டர் ராஜா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கூட்டத்தில் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை பாதுகாக்கவும் காலதாமதத்தை தவிர்க்கவும் மாநில அளவில் இயங்கி வரும் தணிக்கை துறையினை மாவட்டம் தோறும் முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தணிக்கை தடையினை காரணம் காட்டி ஓய்வுதியப் பலன்களை நிறுத்தி வைப்பதை தவிர்க்க வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் உள்ளிட்ட அனைத்து பதவிகளுக்கும் பதவி உயர்வு கலந்தாய்வு நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆசிரியர்களின் நலனை பாதுகாக்க உடனடியாக பணி பாதுகாப்பு சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து பள்ளிகளிலும் இரவு காவலர், துப்புரவாளர், அலுவலக உதவியாளர் பணியிடம் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நிறைவாக கல்வி மாவட்ட தலைவர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

**காணவில்லை**

எனக்கு பாத்தியப்பட்ட பத்திரம் ஆவண எண்: 1 புத்தகம் 1181/2022 எண்ணாக கமுதி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ள அசல் ஆவண பத்திரம் 20.10.2024 ஆம் தேதியன்று கமுதி பேருந்து நிறுத்தம் அருகிலுள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து விட்டு வரும் போது தவறி தொலைந்து போய்விட்டது, எங்கு தேடியும் கிடைக்கவில்லை. அதனை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

**மா.தர்மர்,** த/பெ மாரிச்சாமி நாயக்கர்,
9, பெரியஉடப்பங்குளம், கமுதி தாலுகா,
இராமநாதபுரம்- 623605. செல் : 9751551183.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within three months there after. I, P.RAJAVARMAN, S/o.K.PANDIAN aged 34, permanently residing at 4/1/1a, Samban Oorani Street, Thirupathur Post,Thirupathur Taluk, Sivagangai District-630211 intend having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-600104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**P.RAJAVARMAN**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**பரமக்குடி**
**O.S. No: 34/2024**

1. பாலசரசுவதி
2. ஜனனி
3. கிஷோர் ---- வாதிகள்

--- எதிர்---

1. ராமு
2. அனிதா
3. ராஜேஸ்வரி
4. ஜெயராமன்
5. இந்துமதி
6. கணேசன்

--- பிரதிவாதிகள்

அறிவிப்பு

இந்த நம்பர் வழக்கின் நீதிமன்ற அழைப்பாணை 2-ஆம் பிரதிவாதி முகவரிக்கு அனுப்பியதில் சார்பாகாத காரணத்தால் விளம்பர நாளிதழில் அறிவிப்பு வெளியாக உத்தர வானத்தின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. வாதிகள் தொடர்ந்துள்ள இந்த வழக்கில் ஷை 2-ஆம் பிரதிவாதிக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் எதிர்வரும் 16.12.2024-ம் தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமாகவோ ஆஜராகித் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. அவ்விதம் மறுப்புத் தெரிவிக்காத பட்சம் மறுதரப்பிலா நிலையில் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் என்பதை ஷை 2-ம் பிரதிவாதிக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வழக்குரைஞர் சி.பசுமலை.
அறி. இள. ச.இள.,
பரமக்குடி.

**உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்**
**மற்றும் உதவி ஆட்சியர்**
**அலுவலகம், பரமக்குடி.**
**ந.க.பி6/4561/2024**

ரவிக்குமார்
த/பெ சோமுத்தேவர்
தூமாட்டி ரெங்கசாமி
அய்யர் சந்து,
மதுரை-9.

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசிக்கும் மனுதாரராகிய நான் எனது தந்தை சோமுத் தேவர் என்பவர் கடந்த 10-10-1997-ம் தேதி அன்று கமுதி வட்டம், முத்தாலங்குளம் கிராமத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி இந்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய தந்தை இறந்ததை அறியாமையின் காரணமாக பதிவு செய்ய தவறி விட்டேன். மேற்படி விசாரணைக்கான வாய்தா எதிர்வரும் 25-11-2024 அன்று பரமக்குடி உதவி ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அறிவிப்பு வெளியான 15 தினங்களுக்குள் காலை 10மணிக்குமேற்படி நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

ரவிக்குமார்
மனுதாரர்

**மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்**
**A.S.No: 17 /2024 In**
**O.S No.36/2012**

1. ஹபீபுல் கரீம்
2. முகம்மது மீரான் அவரது பவர் ஏஜெண்ட்டான 1-ம் வாதி ஹபீபுல் மூலமாக
3. ஹிதாயத்துல் ரஹ்மான்

- அப்பீல் மனுதார்கள்

-எதிர்-

1. அன்வர்தீன்
2. சாகுல்ஹமீது
3. செய்கு அலாவுதீன்

- 5,8,9 அப்பீல் எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

ஷை மனுவில் கண்ட 5,8,9 அப்பீல் எதிர்மனுதார்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், இந்த அப்பீல் மனுதார்கள் தங்களுக்கு எதிராக மாண்புமிகு இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தின் O.S.No:36/2012 வழக்கில் 7.03.2024-ம் தேதி ஏற்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்யுமாறு பரிகாரம் கோரி மேல் முறையீடு தாக்கல் செய்துள்ளார். இதில் தாங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் 02.12.2024-ம் தேதி காலை 10.30 மணிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ளலாம் என்றும், தவறும் பட்சத்தில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை எனக்கருதி ஷை வழக்கில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவு செய்ய நேரிடும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

K.நாகராஜன் B.Sc.B.L.,
N.சுந்தர்கிருஷ்ணா B.A.,M.L.,
அட்வகேட்ஸ், இராமநாதபுரம்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

**( 25.11.2024 முதல் 01.12.2024 வரை )**

**ஜோதிடர்**
**எஸ். விஜயநரசிம்மன், மதுரை.**

## மேஷம்

**(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)**

அஸ்வினி --

இந்த வாரம் வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவர். சிலருக்கு தங்கள் மனதிற்குப் பிடித்த படி அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் எப்பாடுபட்டாவது வெற்றி அடைவீர்கள். சிலருக்கு வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்தும் உயரும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிட்டும். பால்வளம் பெருகுவதால் ஆதாயம் பெருகும்.

பரணி --

இந்த வாரம் உங்களுக்கு திடீர் பயணங்களால் மனமகிழ்ச்சி உண்டாகும். பக்தி மார்க்கத்தில் மனம் ஈடுபடும். சிலருக்குக் குடும்பத்தில் அனாவசிய செலவுகள் ஏற்படும். பிறரிடம் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும். உங்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு கூடிய உழைப்பு, பிறரால் கவனிக்கப்பட்டு, ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். விழாக்களில் அதிகம் பேசாமல் அடக்கி வாசிப்பது நல்லது. முனைப்புக் காட்டும் முயற்சிகள் வெற்றி பெறும். தொழில் ஆர்வம் கூடினால் தான் ஆதாயத்தை எதிர்பார்க்கலாம். சிலருக்கு தேவையற்ற கவலைகள் எழும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்படும். வீட்டில் பெரியவர்கள் ஆசியுடன் சுபகாரியங்கள் விமரிசையாக நடக்கும். சகோதரரிடம் அன்பாய் இருங்கள்.. மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது மேன்மை தரும். வியாபாரிகளுக்கு கடன் கொடுத்தவர்கள் தொல்லை தரலாம். வாலிப நெஞ்சங்கள் விருந்து, சினிமா என மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பர். வாக்குவன்மையால் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். சிலருக்கு சுறுசுறுப்பற்ற நிலை காரணமாகக் காரியத் தடைகள் ஏற்படலாம். வீண் அலைச்சல்கள் ஏற்படும். செலவும் அதிகரிக்கும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )**

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு உங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்யும் விருந்தினரோடு இனிமையாக பொழுதைக் கழிப்பது மகிழ்ச்சி தரும். தாயின் அன்பும், அரவணைப்பும் கவலைகளை மறக்கச் செய்யும். புதிய தொழில் விரிவாக்க முயற்சிகளால், பொருளாதார நிலை உயரும். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். வாக்கு வன்மையால் மேடைப் பேச்சாளர்கள் நல்ல முன்னேற்றம் காண்பர். போட்டி, பந்தயங்களில் வெற்றி அடைவர். புத்தகப் பதிப்பாளர் களுக்கு தொழிலில் ஏற்றம் ஏற்படும்.

ரோகிணி –

இந்த வாரம் பெண்கள் அதிகாலையில் எழுந்து பூஜா காரியங்களில் ஈடுபட்டு மன மகிழ்ச்சி அடைந்து, நிம்மதியும் பெறுவர். வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். சுற்று வட்டாரத்தில் நல்ல புகழ், கௌரவம் உண்டாகும். ஆடை ஆபரண சேர்க்கையால் ஆனந்தம் பெருகும். இடைவிடாத கடின உழைப்பின் காரணமாக நேரத்துக்கு உணவு உண்ணவும் நேரம் இருக்காது. அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். தந்தைவழி உறவுகளால் அனுகூலம் ஏற்படும். அரசு வகை வரிப் பாக்கிகள் செலுத்துவதற்கு தேவையான பணவுதவி கள் கிடைக்கும். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவால் பணியில் முன்னேற்றங்களை அடைய முற்படுவீர்கள்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பாராத வரவு வரும் அளவுக்கு இன்று ஓர் அதிக சக்தி கொண்ட அருமையான நாள். ஆபரண சேர்க்கை உண்டு. கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். தொழில் மற்றும் வியாபாரத்தில் ஈடுபட்டு உள்ளவர்களுக்குப் போதுமான தனவரவு இருக்கும். பெண்களால் இலாபம் ஏற்படும். தாயார் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளுவார். தொலைதூர செய்திகள் நன்மை அளிப்பதாகவும், மன மகிழ்ச்சி அளிப்பதாகவும் இருக்கும். பொதுவாகப் பயணத்தின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிலருக்கு எந்த ஒரு காரியம் செயல்பாடும் சுறுசுறுப்பற்ற மந்த கதியில் நடக்கும். கடன், செலவு என பணம் பற்றிய சிந்தனைகளே அதிகம் இருக்கும்.

## மிதுனம்

**(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)**

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்களால் சந்தோஷம் நிலவும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவர். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். பிரிந்த உறவுகள் சேரும். வாழ்க்கையில் முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. கீழே விழுதல், காயம்பட்டு சிறு விபத்துக்கள் ஏற்படும். சுற்றத்தார் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும்.

திருவாதிரை ---

இந்த வாரம் உங்கள் வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச்செய்திகள் எதிர்பார்க்கலாம். நற்பலன்களை எதிர்பார்க்கலாம். தெய்வ சிந்தனைகள் மூலம் மனதில் அமைதி நிலவும். முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தை வழி உறவுகளால் வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி பொங்கும் தருணங்களால் பந்துக்களின் உறவு பலப்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. வெளி வட்டாரங்களில் ஜாலியாகச் சுற்றுவதால் படிப்பு பாதிப்பு அடையும். செலவையும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பண உதவிகள் கிடைக்கும். தொழிலில் புதிய நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். சினத்தைக் குறைத்தால் வீட்டில் குழப்பங்கள் குறையும். தந்தை வழி உறவுகளால் நன்மைகள் ஏற்படலாம். தீயவர்களை கண்டவுடன் விலகுவது நல்லது. மேலதிகாரிகளின் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம்.

## கடகம்

**(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)**

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். வாக்குவன்மை ஓங்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும். விரைவு (பாஸ்ட் புட்) உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடாது, இருக்கும் நிலையில் தொடர்ந்தால் ஏற்றம் ஏற்படும். பக்தி சொற்பொழிவுகளைக் கேட்பதால் ஞானம் பெருகும். இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

பூசம் --

இந்த வாரம் நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். உங்களுக்கு பயணங்களில் எதிர்பாராத பிரச்சினைகள் ஏற்படலாம். தந்தை வழி உறவுகள் உதவி இருக்காது. மேலதிகாரிகளால் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். தொலைதூரப் பயணங்களின் நன்மை ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். பிறந்த நாள் விருந்துகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்களால் சந்தோஷம் நிலவும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். சிலருக்கு இடமாற்றங்கள், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள்.

## சிம்மம்

**(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)**

மகம் –

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். வியாபாரிகளுக்கு புதிய பொருட்களின் வரவால், பணவரத்து அதிகரிக்கும். நல்லோர் சேர்க்கையால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

பூரம் –

இந்த வாரம் உழைப்பு அதிகமாகி அதற்கேற்றார் போல் ஆதாயமும் அதிகரிக்கும். தொலைதூர செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். பணியில் உள்ளவர்கள் அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் சுபகாரியச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப் படுவதோடு தீரச் செயல்களுக்கான விருது கிடைக்கும். உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் வராது. சிலருக்குப் புதுப்புதுப் பதவிகளும் அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் ஏற்படும்.

## கன்னி

**( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)**

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபா களுக்குச் சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். நீங்கள் எதிர்பாராத விதத்தில் புதிய இடத்திற்கு பணி மாற்றங்கள் ஏற்படலாம். சிலருக்கு பிரிவும், பகையும் ஏற்படலாம். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். பிறர் மேல் இரக்கம் ஏற்பட்டுத் தான தருமங்கள் செய்வார்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு.

அஸ்தம் –

இந்த வாரம் எதிர்பாராத பண வரவுகள் ஏற்படும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். அதன் காரணமாக நீங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாக தனவரவு இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். பயணத்தின் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். அரசு வழியில் எதிர்பார்க்கும் சகாயங்கள் அனைத்தும் தாமதம் இன்றிக் கிடைக்கும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும்

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். உயர்ரக வாகனங்கள் கிடைக்கும்.. சிலருக்கு பணமுடை ஏற்படுவதோடு, தேவையற்ற அலைச்சல்களும் ஏற்படும். சிலர் பலவகையிலும் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரலாம். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும்.

## துலாம்

**( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)**

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் இனிய பயணங்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனைவி, மக்களின் உடல் நிலையில் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். குடும்பத்திற்காக உங்கள் சந்தோஷங்களை தியாகம் செய்வீர்கள். குடும்பத்தினரிடையே வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.

சுவாதி –

இந்த வாரம் கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் மூலம் பணமும், புகழும் கிடைக்கும். தொய்வின்றி தங்கள் பணிகளை கடமையுணர்வுடன் நிறைவேற்றும் அரசுப் பணியாளர்கள் உயர் அதிகாரிகளின் ஆதரவு நிச்சயம் பெறுவர். அன்புக்கு இனியவர்களால் உங்கள் கண்ணீர் துளிகள் துடைக்கப்படும். சோம்பல் அகற்றி சுறுசுறுப்பு இருப்பது நல்லது. உங்கள் அர்ப்பணிப்பு உணர்வோடு கூடிய உழைப்பு, பிறரால் கவனிக்கப்பட்டு, ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். அரசு ஆதரவு, அரசியல்வாதிகளின் ஆதரவு இருக்கும் அதிகாரம் மிக்க பதவி உயர்வு ஏற்படலாம். தேவையற்ற, எதிர்பாராத செலவுகள் மூலம் பணமுடை ஏற்படும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். நல்ல உயர்ந்த மனிதர்களின் நட்பு ஏற்படும். அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. புதிய வியாபார தொடர்புகள் மூலம் வருமானம் பெருகி, வாழ்க்கையும் வளமாகும். மகான்களின் தரிசனம் கிடைக்கும். கவர்ச்சிகரமான பொருட்களை பரிசாக அறிவித்து வியாபாரிகள் வாடிக்கையாளரை கவர்வர். பேச்சாளர்களுக்கு, புத்தக வெளியீட்டாளர் களுக்கும் தொழிலில் வெற்றியும், பாராட்டுகளும் கிடைக்கும். அரசு உதவியுடன் விரிவாக்கத் திட்டங்கள் தீட்டுபவர்களின் திட்டங்கள் தங்கு தடையின்றி நிறைவேற்றி முன்னேற்றம் காண்பர்.

## விருச்சிகம்

**(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )**

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பெண்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும் போது நெருங்கிய உறவுகளின் ஒத்துழைப்பால் நிகழ்ச்சி சிறப்பாக அமையும். நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் மன அமைதி கிடைக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும்.

அனுஷம் –

இந்த வாரம் மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். பிரபலம் அடையும் வகையில் மிகப் பெரிய சாகசங்களை, சாதனைகள் புரிவார்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த அளவுக்கு மேலாக உயர்வுகள் கிடைக்கும். . மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில்கள் வரும்.

கேட்டை –

இந்த வாரம் சம்பாதிக்கும் திறன் மேம்பட்டு, தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தி மகிழ்வீர்கள். சிலருக்கு புத்தி தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். உயர் அதிகாரிகளிடம் சுமூகமாக நடந்து கொள்வது முன்னேற்றத்தைத் தரும். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும்.

## தனுசு

**( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)**

மூலம் –

இந்த வாரம் போட்டித் தேர்வுகளில் எதிர்பார்த்த வெற்றி கிட்டும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும். உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். சிலருக்கு உழைப்பு அதிகமாகி களைப்பும், சோர்வும் ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு சாதகமான நிலை உருவாகி பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். கல்வியில் குழந்தைகளின் தேர்ச்சி பெற்றவர்களை பெருமை கொள்ளச் செய்யும். அரசியலில் சிலருக்கு மாவட்ட பொறுப்புகள் தேடி வரும். உயர் அதிகாரிகளின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்தால் எளிதில் பணி உயர்வு கிடைக்கும். பெரும் புள்ளிகளின் அறிமுகத்தால் நன்மைகள் ஏற்படும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

பூராடம் –

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பும் உங்களுக்குத் தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும். நன்கு ஆராய்ந்து பங்குச் சந்தை மற்றும் போட்டி பந்தயங்களில் ஈடுபட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் சகோதர முன்னேற்றம், காரிய சித்தி, தலைமைப் பதவி ஆகியவை ஏற்படும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். வெற்றி கிடைக்கும். வித்தைகளில் தேர்ச்சியும் அறிவுத்திறனும் கூடும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

## மகரம்

**( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )**

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் உங்களுக்கு அனைத்து சுக சௌகரியங்கள் அதிகரிக்கும். சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். கல்வியைப் பொறுத்தவரை பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். கூட்டாளிகளின் நியாயமற்ற செயல்பாடுகள் எரிச்சலைத் தரும். தொழிலில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைக்க வேண்டியது வரும். சிலர், அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும்.

திருவோணம்-

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மனதில் சந்தோஷம் பொங்கும். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள். அன்னையின் அன்பு, அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் வீண் செலவுகளை குறைத்து பணத்தை சேமித்து வைப்பது எதிர்காலத்துக்கு நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். அரசுப் பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். சில நேரங்களில் சுறுசுறுப்பற்ற நிலையும், மனோபயம் நிலவும். சிலருக்கு மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும்.

## கும்பம்

**(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)**

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பல வழிகளில் வருமானம் கூடுதலாக வரும். பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்திகள் குறையும் வாய்ப்பு ஏற்படலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர்.

சதயம்-

இந்த வாரம் சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். புண்ணியத் திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். உறவினர் இல்ல விழாக்களில் கலந்து கொண்டு களிப்படைவீர்கள். திருமணமாகாத பெண்களுக்குத் திருமணத்துக்கான முயற்சிகள் நடந்து முடியும். அதிகப்படியான வருமானங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி புதிய வேகம் பிறக்கும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும்.

## மீனம்

**( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)**

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் முழுமையான ஒத்துழைப்பு மூலம் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். மனங்கவர்ந்த அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். சிறு தொழில் புரிபவர்களுக்கு வங்கிக் கடன் உதவிகள் கிடைக்கும். தொழில் சிறக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு ஏற்றம் காண்பீர்கள். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். கடையில், நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி, வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவீர்கள். தேவையற்ற பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.. புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம்.

ரேவதி-

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். நல்லுறவுகளின் அனுசரணையோடும், அன்பாலும் குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் சீராகும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம். மாணவர்களுக்கு படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும்.

## ஐ.பி.எல். வரலாற்றில் முதல் முறை:

# ரூ.27 கோடிக்கு ரிஷப் பண்ட் ஏலம்

## ஷ்ரேயாஸை ரூ 26.75 கோடிக்கு பஞ்சாப் எடுத்தது





**துபாய், நவ. 25-**

ஐபிஎல் வரலாற்றில் அதிக தொகையாக ரூ.27 கோடிக்கு ரிஷப் பண்டை ஏலத்தில் எடுத்தது லக்னோ அணி.ரூ .20.75 கோடிக்கு லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் இறுதியாக ஏலம் எடுத்த நிலையில், ஆர்டிஎம் கார்டை பயன்படுத்தியது டெல்லி அணி. ரூ.27 கோடியாக ஏலத் தொகையை லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி உயர்த்திய நிலையில், அந்த தொகைக்கு டெல்லியால் ஈடு கொடுக்க முடியாததால் பண்ட்-ஐ லக்னோஅணியே ஏலத்தில் எடுத்தது. ஷ்ரேயாஸ் அய்யரை ஐபிஎல் வரலாற்றில் அதிக தொகையாக ரூ .26.75 கோடிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணி ஏலத்தில் எடுத்துள்ளது

**577 வீரர்கள்...**

10 அணிகள் பங்கேற்கும் 18வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் அடுத்த ஆண்டு மார்ச் 14ம் தேதி தொடங்கி மே 25 ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதையொட்டி வீரர்கள் தக்கவைப்பு, வீரர்கள் விடுவிப்பு உள்ளிட்டவை நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், ஐ.பி.எல் கிரிக்கெட் வீரர்கள் மெகா ஏலம் சவுதி அரேபியாவில் இன்றும் நடைபெறுகிறது. இந்த ஏலப்பட்டியலில் மொத்தம் 577 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஐ.பி.எல். வீரர்கள் ஏலம் இந்திய நேரப்படி இன்று மாலை 3.30 மணிக்கு தொடங்கியது. ஏல நிகழ்ச்சி ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனலில் நேரடியாக ஒளிபரப்பு செய்யபடுகிறது. ஜியோ சினிமா செயலியிலும் ஏல நிகழ்ச்சியை காணலாம்.

**ரூ.27 கோடிக்கு...**

லியம் லிவிங்ஸ்டனை ரூ.8.75 கோடிக்கு ஏலம் எடுத்தது பெங்களூரு அணி. இதற்கு முன் அவர் பஞ்சாப் அணிக்காக விளையாடினார். யுவேந்திர சாஹலை ரூ.18 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது பஞ்சாப் கிங்ஸ் அணி. ரூ.7.50 கோடிக்கு டேவிட் மில்லரை ஏலத்தில் எடுத்தது லக்னோ அணி. ரூ.10 கோடிக்கு முகமது ஷமியை ஏலத்தில் எடுத்தது ஐதராபாத் அணி. ஐபிஎல் வரலாற்றில் அதிக தொகையாக ரூ.27 கோடிக்கு ரிஷப் பண்டை ஏலத்தில் எடுத்தது லக்னோ அணி.ரூ .20.75 கோடிக்கு லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் இறுதியாக ஏலம் எடுத்த நிலையில், ஆர்டிஎம் கார்டை பயன்படுத்தியது டெல்லி அணி. ரூ.27 கோடியாக ஏலத் தொகையை லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி உயர்த்திய நிலையில், அந்த தொகைக்கு டெல்லியால் ஈடு கொடுக்க முடியாததால் பண்ட்-ஐ லக்னோஅணியே ஏலத்தில் எடுத்மிட்சல் ஸ்டார்க்கை தது .

**மிட்சல் ஸ்டார்க்...**

ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மிட்சல் ஸ்டார்க்கை ரூ . 11.75 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது டெல்லி அணி.கடந்த சீசனில் ரூ 24.75 கோடி என்ற உச்சபட்ச விலைக்கு கொல்கத்தா அணி இவரை ஏலத்தில் எடுத்திருந்தது. இங்கிலாந்து வீரர் ஜோஷ் பட்லரை ரூ 15.75 கோடிக்கு குஜராத் அணி ஏலத்தில் எடுத்துள்ளது ஷ்ரேயாஸ் அய்யரை ஐபிஎல் வரலாற்றில் அதிக தொகையாக ரூ .26.75 கோடிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணி ஏலத்தில் எடுத்துள்ளது. தென் ஆப்பிரிக்க வீரர் ரபடாவை ரூ .10.75 கோடிக்கு குஜராத் அணி ஏலத்தில் வாங்கி உள்ளது ஆர்.டி.எம். கார்டு மூலம் பஞ்சாப் அணி அர்ஷிதீப் சிங்கை ரூ .18 கோடிக்கு மீண்டும் ஏலத்தில் வாங்கி உள்ளது

### உடைக்கப்பட்ட சாதனை

மெகா ஏலம் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் செட்1-ல் இடம் பெற்றிருந்த வீரர்களுக்கான ஏலம் முடிவடைந்துள்ளது. அதில் இடம்பெற்றிருந்த ஸ்ரேயாஸ் ஐயர் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக தொகையான ரூ. 26.75 கோடிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணியால் வாங்கப்பட்டார்.

ஆனால் சில நிமிடங்களிலேயே டெல்லி அணியின் முன்னாள் கேப்டனான ரிஷப் பண்ட் பெயர் ஏலத்தில் வந்தது. அவரை ஏலத்தில் எடுக்க நிறைய அணிகள் ஆர்வம் காட்டின. ஒரு கட்டத்தில் லக்னோ மற்றும் டெல்லி அணிகளுக்கு இடையே போட்டி நிலவின. இறுதியில் லக்னோ அணி ரூ.27 கோடிக்கு அவரை ஏலத்தில் எடுத்தது. இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் அதிக தொகைக்கு ஏலத்தில் வாங்கப்பட்ட வீரர் என்ற ஸ்ரேயாஸ் ஐயரின் சாதனையை சில நிமிடங்களிலேயே ரிஷப் பண்ட் முறியடித்தார்.

## குரூப்-1 முதன்மை தேர்வை கருப்பு மை பேனாவில் மட்டுமே எழுத வேண்டும் டி.என்.பி.எஸ்.சி. அறிவிப்பு

**சென்னை, நவ. 25-**

குரூப்-1, 1பி முதன்மைத் தேர்வை கருப்பு மை பேனாவில் மட்டுமே எழுத வேண்டும் என்று டி.என்.பி.எஸ்.சி. தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- குரூப்-1, 1பி பணிகளில் வரும் காலிப் பணியிடங்களுக்கான முதன்மைத் தேர்வில் தேர்வர்கள் கருப்பு மை பேனாவை (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல்பேனா) மட்டுமே உபயோகிக்க வேண்டும். தேர்வர்கள் விடைப் புத்தகம் முழுவதும், அதாவது தேர்வு எண்ணை எழுதுதல், முதல் பக்கத்தில் கையொப்பமிடுதல், விடை எழுதுதல், படம் வரைதல், அடிக்கோடிடுதல், மேற்கோள்காட்டுதல், விடை புத்தகத்தில் பயன்படுத்தாத இடங்களை / தேவையான எண்ணிக்கைக்கு அதிகமான விடைகளை அடித்தல், போன்றவற்றுக்கு ஒரேவகையான கருப்பு மை பேனாவை (மையூற்று பேனா அல்லது பந்துமுனை பேனா அல்லது ஜெல்பேனா) மட்டுமே உபயோகிக்க வேண்டும். தேர்வர்கள் மேற்கூறிய தேவைகளுக்கு ஒரே வகை கொண்ட கருப்பு மை பேனாக்களை போதுமான எண்ணிக்கையில் வைத்திருக்க வேண்டும். தேர்வர்கள் கருப்பு மை பேனாக்களை தவிர மற்ற பேனாக்களை உபயோகித்தால் அவர்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5000 ரன்கள் மற்றும் 100 விக்கெட்டுகள்:

# டி20 கிரிக்கெட் போட்டியில் ஹர்திக் பாண்ட்யா சாதனை



**இந்தூர், நவ. 25-**

5000 ரன்கள் மற்றும் 100 விக்கெட்டுகளை டி20 கிரிக்கெட் போட்டிகளில் முதல் இந்திய வீரராக மாபெரும் ஹர்திக் பாண்ட்யா சாதனை படைத்துள்ளார்.

**குஜராத் அணி...**

17-வது சையத் முஷ்டாக் அலி டி20 கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் பரோடா - குஜராத் அணிகள் இந்தூரில் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த குஜராத் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 184 ரன்கள் எடுத்தது. இதையடுத்து 185 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பரோடா 19.3 ஓவர்களில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 188 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது. பரோடா தரப்பில் ஹர்திக் பாண்ட்யா 74 ரன்கள் எடுத்தார். ஐ.சி.சி தரவரிசையில் உலகின் நம்பர் 1 டி20 ஆல்ரவுண்டராக இருக்கும் பாண்ட்யா அபாரமாக ஆடி அணியை வெற்றி பெறச்செய்தார்.

**டி20 கிரிக்கெட்டில்...**

இந்த 74 ரன்களையும் சேர்த்து டி20 கிரிக்கெட்டில் அவர் 5067 ரன்கள் எடுத்துள்ளார். அத்துடன் பந்து வீச்சில் அவர் 180 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். இதன் மூலம் டி20 கிரிக்கெட்டில் 5000 ரன்கள் மற்றும் 100 விக்கெட்டுகளை எடுத்த முதல் இந்திய வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை பாண்ட்யா படைத்துள்ளார். இதனால் அவருக்கு பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இந்தப்பட்டியலில் ரவீந்திர ஜடேஜா 3684 ரன் மற்றும் 225 விக்கெட்டுகள் எடுத்து 2வது இடத்திலும், அக்சர் படேல் 2960 ரன் மற்றும் 227 விக்கெட்டுகள் எடுத்து 3வது இடத்திலும் உள்ளனர்.

## கிழக்கு இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அதிக முன்னுரிமை: பிரதமர் மோடி

**புதுடெல்லி, நவ. 25-**

கிழக்கு இந்தியாவின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற 'ஒடிசா பர்பா 2024' என்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசியதாவது;- "ஒடிசா எப்போதும் சாதுக்கள் மற்றும் அறிஞர்களின் நிலமாக இருந்து வந்துள்ளது. இந்தியாவின் கலாசார செழுமைக்கு ஒடிசா மிக முக்கியமான பங்களிப்பை அளித்துள்ளது. ஒரு காலத்தில் ஒடிசா உள்ளிட்ட கிழக்கு இந்திய பகுதிகள் பின்தங்கிய பகுதிகளாக கருதப்பட்டன. ஆனால், கிழக்கு இந்திய மாநிலங்களை வளர்ச்சிக்கான இயந்திரமாக நாங்கள் பார்க்கிறோம்.

எனவே, தற்போது கிழக்கு இந்தியாவின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. கிழக்கு இந்திய மாநிலங்களில் அனைத்து துறைகளிலும் தற்போது வேகமான வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றன. 10 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசிடம் இருந்து ஒடிசாவுக்கு கிடைத்த நிதியை விட தற்போது 3 மடங்கு அதிக நிதி கிடைக்கிறது. கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் ஒடிசாவுக்கு 30 சதவீதம் அதிக பட்ஜெட் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று நாகப்பட்டினம் கலைஞர் அரங்கத்தில், தி.மு.க. சார்பில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பள்ளி, கல்லூரிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு கிரிக்கெட், கூடைப்பந்து, கைப்பந்து, இறகுப்பந்து விளையாட்டுகளுக்கான உபரகரணங்கள் அடங்கிய தொகுப்பு என 2,400 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## நாகர்கோவில் புனித சவேரியார் பேராலய திருவிழா தொடங்கியது

**நாகர்கோவில், நவ. 25-**



நாகர்கோவில் கோட்டாரில் உள்ள புனித சவேரியார் பேராலய திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

நாகர்கோவில் கோட்டாரில் உள்ள கேட்ட வரம் தரும் புனித சவேரியார் பேராலய திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. டிசம்பர் 3-ம் தேதி வரை திருவிழா நடக்கிறது. திருவிழா நாட்களில் தினசரி காலையில் திருப்பலியும், மாலையில் ஆடம்பர கூட்டுத் திருப்பலி நடைபெறுகின்றன.

8-ம் திருவிழாவான டிசம்பர் 1-ம் தேதி காலை 6.15க்கு திருப்பலி நடக்கிறது. அன்று காலை 8 மணிக்கு முதல் திருவிருந்து திருப்பலி நடைபெறுகிறது. மாலை 6.30 மணிக்கு ஆடம்பர கூட்டு திருப்பலி நடக்கிறது. பின்னர் அன்று இரவு 10.30 மணிக்கு தேர் பவனி நடைபெறுகிறது.

9-ம் திருநாளான டிசம்பர் 2-ம் தேதி மாலை 6.30 மணிக்கு சிறப்பு மாலை ஆராதனை, நற்கருணை ஆசீர் நடக்கிறது. இதில் கோட்டார் மறை மாவட்ட ஆயர் நசரேன் சூசை தலைமை வகித்து ஆசி வழங்குகிறார். தொடர்ந்து அன்று இரவு 10.30 மணிக்கு 2-ம் நாள் தேர் பவனி நடக்கிறது.

10-ம் திருநாளான டிசம்பர் 3-ம் தேதி செவ்வாய்கிழமை காலை 6 மணிக்கு ஆயர் நசரேன் சூசை தலைமையில் பெருவிழாத் திருப்பலியும், 8 மணிக்கு மலையாள திருப்பலி நடக்கிறது. அன்று காலை 11 மணிக்கு தேர்பவனி நடைபெறும். அன்று இரவு 7 மணிக்கு தேரில் ஆடம்பர கூட்டுத் திருப்பலி நடைபெறும்.

தேர் பவனியின் போது தேருக்கு பின்னால் பக்தர்கள் விழுந்து கும்பிடு நமஸ்காரம் செய்து, தங்களது நேர்த்திகடனை செலுத்துவார்கள். உப்பு, மெழுகுவர்த்தியும் காணிக்கையாக வழங்குவார்கள். சவேரியார் பேராலய திருவிழாவையொட்டி டிசம்பர் 3-ம் தேதி, குமரி மாவட்டத்துக்கு உள்ளூர் விடுமுறை ஆகும்.

திருவிழாவுக்கான ஏற்பாடுகளை பேராலய பங்கு தந்தை பஸ்காலிஸ், உதவி பங்கு தந்தை ஷாஜன் செசில், பங்கு பேரவை துணைத்தலைவர் ஜேசுராஜா, பங்கு பேரவை செயலாளர் ராஜன், துணை செயலாளர் ராஜன் ஆராச்சி, பொருளாளர் ஜார்ஜ் பிரகாஷ் ராபின் மற்றும் பங்கு மக்கள் செய்து வருகின்றனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## ஆஸி.க்கு எதிரான முதல் டெஸ்ட்:

# வெற்றியை நோக்கி இந்தியா

**பெர்த், நவ. 25-**



பெர்த் டெஸ்ட் போட்டியில் 3-வது நாள் முடிவில் வலுவான நிலையில் உள்ள இந்திய அணி வெற்றியை நோக்கி செல்கிறது.

**104 ரன்களில்...**

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை தொடரின் முதல் டெஸ்ட் போட்டி பெர்த் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்று முதல் இன்னிங்சில் விளையாடிய இந்தியா 150 ரன்களில் ஆல் அவுட் ஆனது. பின்னர் விளையாடிய ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 104 ரன்களில் ஆல் அவுட் ஆனது. இதனையடுத்து 46 ரன்கள் முன்னிலையுடன் விளையாடிய இந்தியா 2-வது நாளில் விக்கெட் இழப்பின்றி 172 ரன்கள் அடித்திருந்தது. தொடக்க ஆட்டக்காரர்கள் ஆன ஜெய்ஸ்வால் 90 ரன்களுடனும், கேஎல் ராகுல் 62 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

**3-வது நாள் ஆட்டம்...**

இந்நிலையில் 3-வது நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து பேட்டிங் செய்த இந்தியா 2-வது இன்னிங்சில் 6 விக்கெட்டுகளை இழந்து 487 ரன்கள் அடித்த நிலையில் டிக்ளேர் செய்தது. அதிகபட்சமாக ஜெய்ஸ்வால் 161 ரன்களும், விராட் கோலி 100 ரன்களும் குவித்தனர். ஆஸ்திரேலிய தரப்பில் அதிகபட்சமாக லயன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு 534 ரன்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

**12 ரன்களுக்குள்...**

இதனையடுத்து கடின இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு முதல் ஓவரிலேயே பும்ரா செக் வைத்தார். தொடக்க ஆட்டக்காரர் ஆன மெக்ஸ்வீனியை டக் அவுட்டில் வீழ்த்தினார். இதனையடுத்து நைட் வாட்ச்மேனாக களமிறங்கிய கம்மின்சை சிராஜ் அவுட்டாக்கினார். மேலும் பும்ரா அடுத்த ஓவரிலேயே லபுசாக்னேவை வீழ்த்த அத்துடன் 3-வது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆஸ்திரேலியா 12 ரன்களுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்து வருகிறது. இந்தியா இந்த டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற பிரகாசமான வாய்ப்புள்ளது. உஸ்மான் கவஜா 3 ரன்களுடன் களத்தில் உள்ளார். இத்தகைய சூழலில் இன்றைய 4-வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

### விராட், ஜெய்ஸ்வால் சதம்

3-வது நாள் ஆட்டத்தில் தொடர்ந்து பேட்டிங் செய்த கேஎல் ராகுல் - ஜெய்ஸ்வால் தொடக்க விக்கெட்டுக்கு 201 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தனர். கேஎல் ராகுல் 77 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் ஜோடி சேர்ந்த கோலி - ஜெய்ஸ்வால் இணை சிறப்பாக விளையாடி அணி வலுவான முன்னிலை பெற உதவினர்.

அபாரமாக விளையாடிய ஜெய்ஸ்வால் 161 ரன்களில் ஆட்டமிழந்தார். விராட் கோலி அதிரடியான ரன் குவிப்பில் ஈடுபட்டனர். மீண்டும் பார்முக்கு திரும்பிய விராட் கோலி ஒரு வருடத்திற்கு பிறகு டெஸ்ட் போட்டியில் சதமடித்து அசத்தினார்.

## அதிக முறை 150 ரன்கள் எடுத்து

# சச்சின் சாதனையை சமன் செய்தார் ஜெய்ஸ்வால்



**பெர்த், நவ. 25-**

அதிக முறை 150 ரன்கள் எடுத்து டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் சச்சின் சாதனையை யஷஸ்வி ஜெய்ஸ்வால் சமன் செய்துள்ளார்.

**150 ரன்களில்...**

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான பார்டர் - கவாஸ்கர் கோப்பை (2024-25) தொடரின் முதல் போட்டி பெர்த் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்தியா தனது முதல் இன்னிங்சில் 150 ரன்களில் ஆல் அவுட் ஆனது. அதிகபட்சமாக நிதிஷ் ரெட்டி 41 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக ஜோஷ் ஹேசில்வுட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**2வது நாளில்...**

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய ஆஸ்திரேலிய அணி இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 104 ரன்களில் சுருண்டது. அதிகபட்சமாக ஸ்டார்க் 26 ரன்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அபாரமாக பந்துவீசிய பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனையடுத்து 46 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணி 2வது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 172 ரன்கள் எடுத்திருந்தது.

**சச்சினின் சாதனை...**

ஜெய்ஸ்வால் 90 ரன்களும், கேஎல் ராகுல் 62 ரன்களும் எடுத்து களத்தில் இருந்தனர். இன்று 3ம் நாள் ஆட்டம் நடைபெற்று வருகிறது. இதில் தொடர்ந்து பேட்டிங் செய்த இந்தியா தரப்பில் ராகுல் 77 ரன், ஜெய்ஸ்வால் 161 ரன், படிக்கல் 25 ரன், ரிஷப் பண்ட் 1 ரன் மற்றும் ஜூரெல் 1 ரன் எடுத்து அவுட் ஆகினர். தற்போது விராட் கோலி மற்றும் வாஷிங்டன் சுந்தர் இணைந்து ஆடி வருகின்றனர். இந்நிலையில் இந்த ஆட்டத்தில் ஜெய்ஸ்வால் 161 ரன் எடுத்ததன் மூலம் சச்சினின் மாபெரும் சாதனையை சமன் செய்துள்ளார்.

முதலிடத்தில் பிராட்மேன்...

அதாவது, 23 வயதினை எட்டுவதற்குள் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக முறை 150 ரன்கள் அடித்த இந்திய வீரர் என்ற சச்சினின் சாதனையை (4 முறை) ஜெய்ஸ்வால் சமன் செய்துள்ளார். இந்த பட்டியலில் ஆஸ்திரேலியாவின் டான் பிராட்மேன் (8 முறை) முதல் இடத்தில் உள்ளார். 2வது இடத்தில் பாகிஸ்தானின் ஜாவேத் மியான்டத், தென் ஆப்பிரிக்காவின் கிரேம் ஸ்மித், இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர், யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஆகியோர் (தலா 4 முறை) உள்ளனர்.

## வார விடுமுறையை முன்னிட்டு

# கன்னியாகுமரியில் குவிந்த சுற்றுலா அய்யப்ப பக்தர்கள்

**குமரி, நவ. 25-**



கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள், சபரிமலை பக்தர்களின் கூட்டம் அலை மோதியது.

சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். இங்கு ஆண்டு முழுவதும் சுற்றுலா பயணிகள் வந்து சென்றாலும் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்களும் வழக்கத்தைவிட அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள்.

இந்த காலகட்டத்தில் சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களும் அதிகமாக வருவார்கள். இதனால் இந்த 3 மாத காலமும் இங்கு சீசன் காலமாக கருதப்படுகிறது. இந்த ஆண்டு சபரிமலை சீசன் கடந்த 16-ந் தேதி தொடங்கியது. இதைத்தொடர்ந்து கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் சபரிமலை பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையையொட்டி கன்னியாகுமரியில் நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகளும், அய்யப்ப பக்தர்களும் அதிகளவில் குவிந்துள்ளனர். முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை, சன்ரைஸ் பாயின்ட் போன்ற பகுதிகளில் காத்திருந்து சூரிய உதயத்தை கண்டு ரசித்தனர்.

அதன்பிறகு முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவில் மற்றும் திருப்பதி வெங்கடாசலபதி கோவிலில் சுற்றுலா பயணிகள் மற்றும் அய்யப்ப பக்தர்கள் சாமி தரிசனம் செய்து வருகின்றனர். தொடர்ந்து கடலின் நடுவே அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தை சுற்றுலா பயணிகள் படகில் சென்று பார்த்து ரசித்து வருகின்றனர். இதனால் படகுத்துறையில் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய சூழல் உள்ளது.

இதுபோல் காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவு பூங்கா, கடற்கரை சாலையில் உள்ள பேரூராட்சி பொழுதுபோக்கு பூங்கா போன்ற இடங்களில் சுற்றுலா பயணிகள் மற்றும் அய்யப்ப பக்தர்களின் கூட்டம் நிரம்பி வழிகிறது. சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்துள்ளதால் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் கடற்கரை பகுதியில் சுற்றுலா போலீசாரும், கடலோர பாதுகாப்பு போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ரூ.10.75 கோடிக்கு நடராஜன் ஏலம்



10 அணிகள் பங்கேற்கும் 18வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் அடுத்த ஆண்டு மார்ச் 14ம் தேதி தொடங்கி மே 25 ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதையொட்டி வீரர்கள் தக்கவைப்பு, வீரர்கள் விடுவிப்பு உள்ளிட்டவை நிறைவடைந்துள்ளன. இந்நிலையில், ஐ.பி.எல் கிரிக்கெட் வீரர்கள் மெகா ஏலம் சவுதி அரேபியாவில் இன்றும் நடைபெறுகிறது.

இந்த ஏலப்பட்டியலில் மொத்தம் 577 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். ஐ.பி.எல். வீரர்கள் ஏலம் இந்திய நேரப்படி நேற்று மாலை 3.30 மணிக்கு தொடங்கியது. ஏல நிகழ்ச்சி ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனலில் நேரடியாக ஒளிபரப்பு செய்யபட்டது. இதில் நடராஜனை ரூ.10.75 கோடிக்கு ஏலத்தில் எடுத்த டெல்லி அணி



நாகப்பட்டினத்தில் தி.மு.க. மாநில மீனவரணி செயலாளர் அக்கரைப்பேட்டை கோ.மனோகரனின் மகன் மருத்துவர் ம.குறளரசன்-மருத்துவர் பெ.பிருந்தாஞ்சலி ஆகியோரது திருமணத்தை நேற்று, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து, தம்பதியரை வாழ்த்தினார். திருமண நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், கோவி.செழியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவ.வீ.மெய்யநாதன், வை.செல்வராஜ் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் யானை தாக்கியதில் உயிரிழந்த யானை பாகன் உதயகுமாரின் குடும்பத்திற்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதி ரூ.2 லட்சம் திருக்கோயில் சார்பில், ரூ.5 லட்சம் மற்றும் திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் சார்பில் ரூ.3 லட்சம் என ஆக மொத்தம் ரூ.10 லட்சத்திற்கான காசோலையை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். அருகில் கலெக்டர் இளம்பகவத் உள்ளார்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகே கல்லூரணி பகுதியில் சுமார் 12 லட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் கட்டடப்பட்ட அங்கன்வாடி மையத்தை அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று திறந்து வைத்தார்.

### அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும்:

# அனைத்து கட்சி கூட்டத்தில் காங்கிரஸ் வலியுறுத்தல்

புதுடெல்லி, நவ. 25-

அதானி விவகாரம் குறித்து பாராளுமன்ற கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று டெல்லியில் நேற்று நடந்த அனைத்து கட்சி கூட்டத்தில் காங்கிரஸ் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இன்று பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்க உள்ள நிலையில் டெல்லியில் பா.ஜ.க. மூத்த தலைவர் ராஜ்நாத் சிங் தலைமையில் நேற்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

பாராளுமன்றத்தின் குளிர் காலக் கூட்டத் தொடருக்கு முன்னதாக, பாராளுமன்றத் தின் இரு அவைகளிலும் உள்ள அரசியல் கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தும் நோக்கில் மத்திய பாராளுமன்ற விவகாரங்கள் துறை இந்த கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

பாராளுமன்ற கட்டிடத்தில் உள்ள முதன்மைக் குழு அறையில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் பாராளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் கிரண் ரிஜ்ஜு, மத்திய அமைச்சர் அனுப்பிரியா படேல் உள்ளிட்டோர் அரசு சார்பில் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் எம்.பி.க்கள் பிரமோத் திவாரி, ஜெயராம் ரமேஷ், பிஜூ ஜனதா தள எம்.பி. சஸ்மித் பத்ரா, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் எம்.பி. மிதுன் ரெட்டி, சமாஜ்வாடி கட்சி எம்.பி. ராம்கோபால் யாதவ், தெலுங்கு தேசம் கட்சியின் லவு ஸ்ரீ கிருஷ்ண தேவராயலு, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

அப்போது, கூட்டத்தொடரை சுமுகமாக நடத்துவதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது. கூட்டத்தொடரில் இடம் பெறும் விவாதங்கள் தொடர்பாக அரசியல் கட்சிகள் தங்கள் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

குறிப்பாக, அதானி மீது அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டுள்ள லஞ்ச புகார் தொடர்பாக இந்த கூட்டத்தொடரில் விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியது. மணிப்பூர் பிரச்சினை, வட இந்தியாவில் நிலவும் காற்று மாசுபாடு மற்றும் ரயில் விபத்துகள் குறித்து விவாதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டது.

.நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கி டிசம்பர் 20-ம் தேதி வரை நடைபெற உள்ளது. வக்பு சட்டத் திருத்த மசோதா உள்ளிட்ட 16 மசோதாக்களை தாக்கல் செய்து நிறைவேற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய பிரமோத் திவாரி,

ரயில் விபத்துகள் அதிகரித்துள்ளன. ஜம்மு காஷ்மீரில் தினமும் தீவிரவாத செயல்கள் நடந்து வருகின்றன. தேசிய நலன் சார்ந்த பல விஷயங்களை முன்வைத்துள்ளோம். அதானி விவகாரத்துக்குப் பிறகு பங்குச் சந்தையில் ஏற்பட்டுள்ள சரிவு கவலை அளிக்கிறது.

நாங்கள் பிரச்சினைகளை எழுப்புவோம். பொருளாதாரத்தை பாதுகாப்பதில் எங்களது ஆர்வம் உள்ளது. ஒருமித்த கருத்து இருந்தால் விவாதம் நடத்த வேண்டும், இல்லையென்றால் சட்டப்படி ஆளுங்கட்சியுடன் கலந்தாலோசிப்போம் என தெரிவித்தார்.



முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் மனைவியும், தமிழகத்தின் முதல் பெண் முதல்வருமான ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழாவை முன்னிட்ட நேற்று அ.தி.மு.க. சார்பில் சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் திருமண மண்டபத்தில் ஜானகி ராமச்சந்திரனின் முழு உருவப்படத்தை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி திறந்து வைத்தார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி.உதயகுமார், கடம்பூர் ராஜூ உடனிருந்தனர்.

### ஜானகி ராமசந்திரன் நூற்றாண்டு விழா:

# உடன் பயணித்த திரை கலைஞர்களை கவுரவித்த எடப்பாடி கே.பழனிசாமி

சென்னை, நவ. 25-

சென்னையில் நேற்று நடந்த முன்னாள் முதல்வர் ஜானகி ராமசந்திரனின் நூற்றாண்டு விழாவில் அவருடன் பயணித்த திரை கலைஞர்களை அ.தி.மு.க. பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கி கவுரவித்தார்.

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் மனைவியும், தமிழகத்தின் முதல் பெண் முதல்வருமான ஜானகி ராமச்சந்திரனின் நூற்றாண்டு விழா அ.தி.மு.க. சார்பில் நேற்று சென்னை வானகரத்தில் உள்ள ஸ்ரீவாரு வெங்கடாஜலபதி பேலஸ் திருமண மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த விழா நாதகான சிகாமணிகளான சகோதரர்கள் தி.ச. பாண்டியன் தி.ச. சேதுராம் குழுவினரின் மங்கள இசையுடன் தொடங்கியது. முன்னாள் அமைச்சர் பொன்னையன் வரவேற்று பேசினார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி விழா மேடையில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா மற்றும் ஜானகி அம்மையாரின் உருவ படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் குத்து விளக்கு ஏற்றி வைத்து ஜானகி அம்மையாரின் உருவப்படத்தை திறந்து வைத்தார். இந்த படம் ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டு, ஜானகி அம்மையாருடன் பயணித்த நடிகைகள் வெண்ணிற ஆடை நிர்மலா, சச்சு, குட்டி பத்மினி, உள்ளிட்ட வர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவு பரிசுகளையும் எடப்பாடி பழனிசாமி வழங்கினார்.

அ.தி.மு.க. வரலாறு மற்றும் ஜானகி அம்மையாரின் வாழ்க்கை வரலாறுடன் இணைந்த குறும்படம் திரையிடப்பட்டது.

இதன் பின்னர் சினிமா புகழ் அபிநயா நாட்டியக் குழுவினரின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. இந்த நடனம் முடிந்ததும் நடிகர் தம்பி ராமையா மேடையில் பேசினார்.

அதனை தொடர்ந்து நடந்த கவியரங்கில் , மக்கள் திலகத்தின் மனையரசி என்ற தலைப்பில் மரபின் மைந்தன் முத்தையா பேசினார். மனங்களை கவர்ந்த மாதரசி, என்ற தலைப்பில் திரைப்பட பாடல் ஆசிரியர் கவிஞர் நந்தலாலா, மக்கள் தொண்டில் சிறந்த பேரரசி என்ற தலைப்பில் கவிஞர் ஆதிரா முல்லை ஆகியோரும் ஜானகி அம்மையாரின் பெருமைகளை பேசினார்கள்.

இதன் பிறகு லட்சுமன் ஸ்ருதி குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. ஜானகி அம்மையார் கற்றுக் கொண்டது தாய்மைப் பாசமா? தலைமை பண்பா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும், சினிமா புகழ் நாட்டுப்புற இணையர் செந்தில் கணேஷ் ராஜலட்சுமி குழுவினரின் கிரா மிய இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

தொடர்ந்து திரையுலகினரின் வாழ்த்து காணொலி திரையிடப்பட்டது. இதில் நடிகர் ரஜினிகாந்தின் வாழ்த்து செய்தியும் இடம் பெற்றிருந்தது.

அதனை தொடர்ந்து எம்.ஜி.ஆர். பேசும் குறும்படம் திரையிடப்பட்டது. முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

முன்னதாக ஸ்ரீவாரு மண்டப வளாகத்தில் நடைபெற்ற ஜானகி எம்.ஜி.ஆர். புகைப்பட கண்காட்சியையும் எடப்பாடி பழனிசாமி திறந்து வைத்தார். இறுதியாக முன்னாள் அமைச்சர் வளர்மதி நன்றி கூறினார்.

ஜானகி அம்மையார் நூற்றாண்டு விழாவையொட்டி மண்டபத்தை சுற்றியுள்ள பகுதி விழாக்கோலம் பூண்டிருந்தது. அ.தி.முக் கொடிகள் கட்டப்பட்டு வாழை தோரணங்களால் சாலையின் இரு புறமும் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தது.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக தமிழகம் முழுவதிலும் இருந்து அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் வந்திருந்தனர். இவர்கள் அனைவரும் எடப்பாடி பழனிசாமி வரவேற்று அழைத்துச் சென்றனர்.

# விடுமுறை நாள்: சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு

திருவனந்தபுரம், நவ. 25-

விடுமுறை நாளான நேற்று சபரிமலை ஐயப்பன் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. நேற்று காலை 7 மணிக்குள் 18 ஆயிரத்து 648 பக்தர்கள் புனித படிகளில் ஏறியுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் மண்டல மற்றும் மகர விளக்கு பூஜை சீசன் காலத்தில் லட்சக்கணக்கான பக்தர்கள் வருவார்கள். இந்த ஆண்டு மண்டல பூஜையை முன்னிட்டு கடந்த 15-ம் தேதி கோவில் நடை திறக்கப்பட்டது.

அன்று முதல் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்த வண்ணம் உள்ளனர். அவர்கள் ஆன்லைன் முன்பதிவு செய்து தரிசனம் பெற்றுச் செல்கின்றனர். இதனை அதிகரிக்க முடிவு செய்த போது, பக்தர்கள் கூட்டம் குறைவாகவே உள்ளதாக கூறப்பட்டது. இந்த நிலையில் விடுமுறை நாளான நேற்று சபரிமலையில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. நேற்று காலை 7 மணிக்குள் 18 ஆயிரத்து 648 பக்தர்கள் புனித படிகளில் ஏறியுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் 87 ஆயிரத்து 216 பேர் மலை ஏறியுள்ளனர்.

விடுமுறை தினமான நேற்று கோவிலுக்கு வந்த பக்தர்கள் பலரும் தரிசனம் செய்தவுடன் உடனடியாக திரும்பிச் செல்ல தொடங்குவதாகவும், சன்னிதானத்தில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த போலீசார் கட்டுப்பாடுகளை விதித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் பம்பை மற்றும் நிலக்கல்லில் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளதாகவும் வரும் நாட்களில் இந்த நெரிசல் மேலும் அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

### சிட்டுக்குருவி எண்ணிக்கையை அதிகரிக்க முயற்சி:

# சென்னை அறக்கட்டளைக்கு பிரதமர் மோடி பாராட்டு

புதுடெல்லி, நவ. 25-

நகரமயமாக்கல் காரணமாக, சிட்டுக்குருவிகள் நம்மை விட்டு விலகி விட்டன. சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பிரச்சாரத்தில் சென்னையின் கூடுகள் அறக்கட்டளை பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துகிறது என்று நேற்று நடந்த மான் கீ பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.

பிரதமர் மோடி ஒவ்வொரு மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் வானொலியில் மான் கீ பாத் நிகழ்ச்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றி வருகிறார். அதன்படி நேற்று நடந்த 116-வது மான் கீ பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:-

சுவாமி விவேகானந்தரின் 162-வது பிறந்தநாள் அடுத்த ஆண்டு கொண்டாடப்படுகிறது. இந்த முறை சிறப்பாக கொண்டாடப்படும்.

ஜனவரி 11, 12-ம் தேதிகளில் டெல்லி பாரத் மண்டபத்தில் வளர்ந்த பாரத இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

இதில் மாநிலம், மாவட்டம், கிராமங்களில் இருந்து 2 ஆயிரம் இளைஞர்கள் பங்கேற்பார்கள். ஒட்டு மொத்த குடும்பமும் அரசியல் பின்னணி இல்லாத இளைஞர்கள் அரசியலில் சேருமாறு செங்கோட்டையில் இருந்து வேண்டுகோள் விடுத்தேன்.

இதற்காக நாட்டில் பல சிறப்பு பிரச்சாரங்கள் நடத்தப்படும். அது போன்ற ஒரு முயற்சிதான் பாரத இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சி. சில மாதங்களுக்கு முன்பு, தாயின் பெயரில் ஒரு மரம் பிரச்சாரத்தைத் தொடங்கினோம். இதில் மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தற்போது இந்த முயற்சி உலகின் பிற நாடுகளையும் சென்றடைகிறது. எனது சமீபத்திய கயானா பயணத்தின் போது அந்த நாட்டு அதிபர் இர்பான் அலி, அவரது மாமியார் மற்றும் பிற குடும்ப உறுப்பினர்கள் தாயின் பெயரில் ஒரு மரம் பிரச்சாரத்தில் என்னுடன் இணைந்தனர்.

நம்மைச் சுற்றியுள்ள பல்லுயிர் பெருக்கத்தை பராமரிப்பதில் சிட்டுக்குருவிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆனால் தற்போது சிட்டுக்குருவிகள் நகரங்களில் அரிதாகவே காணப்படுகின்றன. அதிகரித்து வரும் நகரமயமாக்கல் காரணமாக, சிட்டுக் குருவிகள் நம்மை விட்டு விலகி விட்டன.

இன்றைய தலைமுறையின் பல குழந்தைகள் சிட்டுக் குருவிகளை படங்களிலோ, வீடியோக்களிலோ மட்டுமே பார்க்கிறார்கள். சிட்டுக் குருவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பிரச்சாரத்தில் சென்னையின் கூடுகள் அறக்கட்டளை பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துகிறது.

அறக்கட்டளையை சேர்ந்தவர்கள் பள்ளிகளுக்குச் சென்று, அன்றாட வாழ்வில் சிட்டுக் குருவிகள் எவ்வளவு முக்கியம் என்பதை குழந்தைகளுக்குச் சொல்கிறார்கள். இந்த நிறுவனம் சிட்டுக் குருவிகள் கூடுகளை உருவாக்க குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கிறது.

ஒரு சிறிய மர வீடு செய்ய குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள். அதில் சிட்டுக் குருவிகள் வாழ்வதற்கும் சாப்பிடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. புத்தகங்கள் மனிதர்களின் சிறந்த நண்பன். இந்த நட்பை வலுப்படுத்த நூலகம் சிறந்த இடம் ஆகும்.

சென்னையில் குழந்தைகளுக்காக பிரகிருத அறிவகம் என்ற அத்தகைய நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இது படைப்பாற்றல் மற்றும் கற்றலின் மையமாக மாறி உள்ளது. இந்த நூலகம் ஸ்ரீராம் கோபாலன் என்பவரின் சிந்தனையாகும்.

அவர் வெளிநாட்டில் பணிபுரிந்த போது குழந்தைகளிடம் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பது குறித்து தொடர்ந்து யோசித்தார்.

இந்தியா திரும்பிய பிறகு இந்த அறிவகத்தை நிறுவினார். இதில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன.

இங்கு குழந்தைகள் படிக்க ஆவலுடன் காத்திருக்கின்றனர். மேலும் கதை சொல்லும் அமர்வுகள், கலைப் பட்டறைகள், நினைவகப் பயிற்சி வகுப்புகள், ரோபாட்டிக்ஸ் பாடங்கள் , பொதுப் பேச்சு என குழந்தைகளை ஈர்க்கின்றன.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.